KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2] 1929 ஞு ஜூலை மீ 4உ [No 26.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 501
2. அப்பர். E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 503
3. கலைத்திறம் நுனிக்கும் கலைஞன். K. இராஜகோபாலன் 504
4. மாறன் பாப் பாவினம் (வஞ்சிப்பா - மருட்பா) 506
5 கம்பராமாயணம் (வரைக்காட்சிப் படலம்) T. N. சேஷாசலம் B. A, B. L 508
6 தமிழ்ப் பாடம் (திருவேங்கடமாலை) 510
7. குலசேகரர் (நடமாடுங்கோயில்) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 512
8. வில்லி பாரதம் (காண்டவதகனச் சருக்கம்) T. S. நடராஜ பிள்ளை B. A B.L. 514
9. "பழமுதிர்சோலை" (வாழி வானரம்) - "சபரி" 516
10 வர்த்தமானம் 519

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாயினும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினாங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது.
மானேஜர்.

கலா நிலயம்

கல்சரின் அவசியம்.

I

ஆங்கிலத்தில் 'கல்சர்' (Culture) என்னும் மொழிக்கு நேராகப் பொருள்தரவல்ல சொல் தமிழில் தேர்வது அருமையாயிருக்கின்றது. கல்வியென்னும் பதமும், 'கல்சர்' என்னும் பதமும் ஒலியால்மாத்திரமன்றிப் பொருளாலும் ஒரே பகுதியினடியாகப் பிறந்திருப்பனபோல் தோன்றினும் நாம் வழங்கிவரும் முறையில் 'கல்வி' என்னுமிச்சொல் 'கல்சர்' என்னும் அம்மொழி குறிக்கொள்ளும் கருத்துக்கள் முழுவதையும் தருகின்றதில்லை. ஒருவனை நோக்கி நாம் 'இவன் கல்வியுடையவன்' என்று கூறும்போது, 'சிலவேனும் பலவேனும் நூல்களில் அவன் பயின்றுள்ளவன்' என்னும் செய்தியைத் தெரிவிக்கலாகின்றதே யன்றி, நற்குண நற்செய்கைகளில் பழக்குவித்துக் கண்ணோட்டம் மென்மொழி முதலிய தன்மைகளை அளிக்கும் நூல்களில் அவன் பயின்றுளான் என்றேனும், மற்றுப் பயின்றிருப்பினும் அப்பயிற்சியால் எய்துதற்குரிய நற்பயன்களை அவன் பெற்றுளான் என்றேனும், அவ்வாசகம் தெரிவிக்காதொழிகின்றது. அதுவுமன்றி, கண்ணோட்டம் இன்சொல் வெருவந்தசெய்யாமை, ஒப்புரவு முதலிய மேம்படுதன்மைகள் இலக்கிய இலக்கணங்களை விருப்பத்துடன் கற்கவேண்டிய முறைப்படி கற்பதால் வந்தெய்துவது திண்ணம் எனினும், குலநலம் ஈன்றோர்திறம் சான்றோர்உறவு இயற்கைவளம் ஆயவைகளும் முன்னுரைத்த தன்மைகளை எய்துவிப்பதற்கு ஒவ்வோர் வழியில் உதவியாகின்றன. தமிழ்ச்சொல் 'கல்வி'யில் நூற்கல்வியும், சித்திரம் சங்கீதம் போன்ற கலைகளின்பயிற்சியும் அடங்குமேயல்லாமல், அவைகளால் வருவதற்கிருக்கின்ற தூய நினைவிற்கும் செயலிற்கும் சொல்லிற்கும் இடனாய் உடனின்று உதவவல்ல இப்பின்னையவைகளும் அடங்கும்படி நாம் அச்சொல்லை வழங்குவதில்லை. 'கல்சர்' என்ற ஆங்கிலமொழி நூற்கல்வி கலைப்பயிற்சி மாத்திரமன்றி மனோவாக்கு காயங்களின் தூய்மைக்கு ஆதாரமாயிருக்கின்ற பிற சாதனங்களையும் தன்னுள் கொண்டிருக்கின்றது. அதுவுமன்றி கல்வியாலும் கலைப்பயிற்சியாலும் மற்றைய சாதனங்களாலும் எய்திய நன்னிலையையுங் குறிக்கும். ஆதலின் இனி நாம் இஃதனைய கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டிய விடங்களில், பற்பல சொற்களால் அவைகளை அடிக்கடி எழுதாவண்ணம், 'கல்சர்' என்னுமவ் வாங்கிலச் சொல்லையே பயின்று வருவோம்.

அயலோர்பால் அன்பும், மற்றவர்க் குதவவேண்டு மென்னும் ஆர்வமும், மானுடமடமையை நீக்கி இடுக்கண்களைந்து எல்லோருமெங்கு மின்புற்றிருக்குமாறு செய்யவேண்டுமெனும் விருப்பமும், நாம் பிறந்தநாள் கண்டதிலும் இவ்வுலகம் நன்மையும் இன்பமும் அதிகம் பெற்றிருக்க அகலும்நாள் காணவேண்டுமெனும் உயரியநோக்கமும், இவையனைய பொதுநலக்கூட்டுறவு வாழ்க்கைக்குரிய பிறகருத்துக்களையும் ஒருவனுக்கு எய்துவிப்பது கல்சர். அக்கருத்துக்களுடையவன் கல்சர் உடையவன் எல்லாம் செம்மையாயிருக்கவேண்டு மெனும் அவாவினின்று விளைவது கல்சர்; மீண்டு மவ்வவாவினை விளைவிப்பதும் கல்சரே. சுருங்கச் சொல்லின் செம்மையின்பால் சிந்தனையைச் செலுத்துவது கல்சரெனலாகும். புலனறிவைப் பகுத்தறிவாக்கி அப்பகுத்தறிவும் பரம்பொருள் சித்தமும் எவ்விடத்தும் தளராது ஓங்கி யாவற்றிற்கும் மேலாய் நிலைநிற்குமாறு புரிவது கல்சரின் கருமம்.

பொதுநலக்கூட்டுறவின் நன்மைக்கியன்ற நோக்கத்தை எய்துவிப்பது கல்சர் எனச் சொன்னோம். ஆயினும் நாமிங்குக் காட்டியவகையில் கல்வி கேள்வி பெரியோர் துணை முதலிய கல்சர் இலாதார்க்கும், அந்நோக்கமும் ஆர்வமும் இருக்கலாம்; இருக்கவுங் காண்கின்றோம். ஆனால், அன்னவர் நல்லனசெய்ய வேண்டுமென்னும் ஆத்திரத்தால், பகுத்தறிவும் பரமன் திருவுள்ளத்தின் வண்ணமும் இன்னபடி இருக்குமென ஓராது விவகரிக்கப் புகுந்துவிடுகின்றனர் ஏதேனும் செய்யவேண்டுமெனும் அவசரம் புகுந்து அலைக்கின்றதாதலால், செம்மை எதுவென்று சிந்திப்பதற்கொத்த அமைதி இல்லாது போகின்றது. சிந்திப்பதைக்காட்டிலும் செய்வதே அவ்வவசரத்திற்குச் சிறப்பாகத் தோன்றுவதுபற்றி, முதிராததன் மனத்தில் முளைத்தவெல்லாம் முழுதாயநலமுடைய கனிகளெனப் பிறர்க்களிக்கப் பறப்பது இயற்கையே. ஆதலின் அன்னவர்க்கிருக்கின்ற குற்றங் குறைகளே அவர்களது செய்கைகளுக்கு ஆதாரமாகின்றன கல்சரின்தன்மையோ இன்னதன்று. நன்மை செய்யவேண்டு மெனும் ஆர்வத்தினளவு, விஷயங்களைப் பகுத்தறிய வேண்டுமெனும் ஆர்வமும் கல்சரினிடத்தில் இணங்கியிருக்கும். பகுத்தறிவின் முடிவென்ன, கடவுளின் கருத்தென்ன, என்று கல்சருடையோர் ஒன்றினைச் செய்யப்புகுவதன்முன் பலகால் சிந்தித்தமர்வரேயல்லாது அம்முடிவிற்கும் கருத்திற்கும்பதிலாக, முதிராத தம்எண்ணங்களின் குற்றங் குறைகளை நடத்திவைக்க விரையமாட்டார். பகுத்தறிவும் திருவுளமும் ஆகாரமாயமையாது எச்செயலும் எந்தத் திட்டமும் நிலைத்திருக்காதென்பதைக் கல்சர் உடையவர் நன்கு அறிவார். ஆதலின், மானுட மடமையும் மிடியும் மறையவேண்டும் என்னுமிந்நோக்கம் அவர் கருத்தைவிட்டு எந்நாளும் நீங்காதிருப்பினும், திட்டங்கள் செய்து அதனை நடத்திவைக்க எளிதில் நேர்வதில்லை. எதனைச் செய்யவேண்டுமென்றும் எப்படிச் செய்யவேண்டு மென்றும் தெரியாதபோது, ஆள்வினையும் சட்டதிட்ட நிர்மாணங்களும் எள்ளளவும் பயன்படாவென்பதை மறவாதார் கல்சருடையார்தாமே.

இத்தகைய கல்சருக்கோர் அவசியம் இந்நாளைப் போல் வேறெந்நாளிலும் ஏற்பட்டதில்லை. இதற்கு முன் நாமெல்லாம் நல்லதோ கெட்டதோ முன்னோர் வகுத்துவைத்திருந்த வழியைப் பின்பற்றிவந்தோம். கெட்டதைப்பார்க்கிலும் நல்லதே மிகுதி யென்பதற்கு ஐயமில்லை. பகுத்தறிவுங் கடவுளின் சித்தமும் இவையிவை யென்று மெய்புணர்வுடைய பெரியோர், கல்சரின் கரை கண்டவ ரென்னத்தக்கவர், வேதங்களென்றும் சாஸ்திரங்களென்றும் புராண இதிகாஸங்களென்றும் மதாசார குலாசார தேசாசாரங்களென்றும் பற்பல வகைகளில் காட்டி நம்மை நடக்குமாறு பணித்தனர். அந்நெறியில் நடந்து வருமளவும் நாமொன்றுங் குறையுற்றிருந்ததாகத் தெரியவில்லை. எல்லாரும் எங்கும் பெரும்பான்மை இன்புற்றிருந்தனர் என்றே எல்லாச் சரித்திரகாரர்களுங் கூறுகின்றனர். அவ்வாறிருக்கக் கல்சர் என்ற காற்றுந் தம்மேல் பட்டிராத பற்பலர், "அதுவன்று அறிவு; கடவுளின் கருத்து அது வன்று" என்று எளிதின் முன்னைய முறைகளையும் விதிகளையும் விலக்கிவிட்டுப் பொதுநன்மையின்பால் இருக்கும் ஆர்வத்தால் தம்முடைய அறிவே அறிவென்றும், தம்முடைய கருத்தே கடவுளின்கருத்தென்றும் சொல்லத் துணிகின்ற காலமாயிற்று இந்நாள். வியாசர் வால்மீகி சங்கரர் என்னுமக் குணத்தொடு கல்வியும் புணர்ந்த குன்றனையவர் அறிவு பிழைத்ததென்பாரெனின், கடவுளின்சித்தம் அவர்களே கண்டபடி அன்றென்பாரெனின், அவ்வாறுஉரைப்பவர் நிலைஎன்னும்! கற்றனவெல்லாம் எற்றே இவர்க்கென்று அடங்குதற்குக் கல்வி வேண்டுமாகையால், அக்கல்வியில்லாதார் கழறுவன கேட்டு வருந்துகின்றோமாயினும் வியப்பெய்துவதில்லேம்.

கல்சரில்லாதவர் கோட்டிகொள்வதால், பழைய பழக்க வழக்க விதி விலக்குகளில் நல்லனவும் பற்பல கவிழ்ந்திடலாகி வாழ்க்கையின் நோக்கமும் பகுத்தறிவிற்கு மாறுபட்டுழலலாகின்றது. அக்கடவுள் வாலறிவன் ஆதலால், உண்மையை ஆய்ந்தோய்ந்து பார்க்கும் பகுத்தறிவின் முடிவினிற்கு அயலானதெல்லாம் கடவுளின் கருத்திற்கும் அருளிற்கும் அயலானவைகளே ஆகும் என்பதற் கையமில்லை. ஆகலின் கடவுளின் கருத்திற்கிசைந்தவைகள் இன்னவாறு கழிக்கப்படுகின்றனவே யென்று எண்ணி ஏங்குகின்ற காலத்தில், அக்கடவுள் கருத்திற்கு நேர் எதிரானவைகள் புகுவதுங்கண்டு அஞ்சலாகின்றோம். கழிந்தன கழிக, மற்றொன்றும் புதியன புகாதிருந்தால்போதும் என்னும் நிலை வெகுவிரைவில் எய்தி வருகின்றது. பழைய வழக்கங்களின் பொருளும் பயனும் உணராமல் முன்னோர் விதியெனும் பான்மையால் சிறிது காலம்முன்தொட்டுச் சனங்கள் கண்மூடித்தனமாய் ஒழுகிவந்தனர். பொருளும் பயனும் தெரியாமற் செய்வதொன்றும் நெடுநாள் நீடித்திராது. கடவுளின் கருத்தைத் தம் பகுத்தறிவைக்கொண்டு நடத்திவைக்கின்றோம் என்னும் மகிழ்வும் ஊக்கமும் இல்லாத செயல்கள் உயிரற்றவைகள் என்பது உண்மையே. அவ்வுயிரற்றபின்னும் அவைகளை விட்டுவிடச் சிலகாலமாய் அஞ்சியிருந்தனர். இப்பொழுது அவ்வச்சம் நீங்கிச் சனங்கள் விவகரிக்கத் தலைப்பட்டது ஒருவிதத்தில் நல்லதொரு செவ்வி என்றே எண்ணவேண்டும். புதியதென்று எதனைப்புகட்டினும் ஜனங்கள்ஏற்கச் சித்தமாகவிருக்கின்றனர். பழையவைகள் இழந்திருந்த உயிரைமீண்டும் அவைகளுக்குக் கொடுத்துப் புதியனவென்று கொடுத்தாலும் கொள்வர். அல்லது பிணம்வேண்டாம், பேயேகொள் எனினும் ஏற்காதார் இலராகார். இந்நிலையில் பொதுஜன இயக்கங்களில் ஈடுபட்டிருப்பவர் பொறுப்புப் பின்னும் பன்மடங்கு அதிகமாகின்றது. அன்னார் கல்சர் உடையவராயின் பகுத்தறிவை முன்னிட்டுக் கடவுளின் கருத்தை, நாம் இழந்தவைகளின்று மீட்டி எடுத்தேனும், புதிய துறைகளில் கண்டேனும் அளிப்பர். இல்லையேல், இழந்த இழவினும் பெற்றபேறு பெருந்துன்பமாய் முடியும். (தொடரும்)

OFFICE OF THE REGI... 3- ..N 19..

அப்பர்

4. பெரியபுராணத்தில் காணாத திருப்பதிகளில் அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பங்களும்

2. தஞ்சைஜில்லாத் திருப்பதிகளின் முதற்பகுதி. சீர்காழியில் அப்பர் பாடியதுமுதல் திருப்பழையாறையில் சமணழித்த வரையில்.

VIII எட்டாம் தொகுதி

இனி வரும் ஸ்தலங்கள் அக்காலத்திய பாண்டிய நாட்டெல்லையிலும் அதற்கருகிலு முள்ளனவாம். அவையாவன (35) திருப்பேரெயில்* (36) திருக்கோளிலி † (37) திருவெண்ணி ‡ (38) திருப்பூவனூர் $ (39) திருத்தலையாலங்காடு ¶ என்பன.

486 பக்கத் தொடர்ச்சி

இவற்றின் திருப்பதிகங்களை முறையே காண்போம். இவை சற்றேறக்குறைய ஒருகாலத்தியனவாய் நடைப்போக்கில் காணப்படுகின்றன. அவற்றைத் தனித் தனிக் காண்போம்: —

(35) திருப்பேரெயில்.—இதனை வங்காரம்பேரையூர், என்றும் ஓகைப்பேரையூர் என்றும் வழங்குவர். இத்திருப்பதியில்அப்பர் பாடியருளிய 11 பாக்களமைந்த திருக்குறுந்தொகைப் பதிகம் ஒன்றே தேவாரத்திலுளது. இதில் பஞ்சபூதச் சிருஷ்டியையும் *பரம்பொருள் செய்வதையும், அடியவர் பிழைகளை நீக்கி அழைக்கு மன்பின ரெம்பிரானென்பதையும் திருநாவுகரசு மொழியும் +. முருகக்கடவுள் சிவனன்றி வேறொருவ ரென்றெனவும் இப்பதிகத்திற் காணலாம் ×.

இப்பதிகம் உலகங்கள் உற்பத்தி, ஒடுக்கம்,முதலியனவற்றைப்பற்றியுங்குறிப்பிடுகிறது. பரம்பொருளையடைய இரவும்பகலும் உழைத்து உருகவேவேண்டு மென்றும், அன்புடன் அப்பரம்பொருளை யழைத்தாலன்றிப் பிழைப்பு நீக்கலரிதெனவுமிப் பதிகம் கூறும்‡

(36) திருக்கோளிலி:—இது மூவராலும் பாடல் பெற்ற ஸ்தலம். சம்பந்தர்பதிகத்தின் முதற்பாட்டும் * அப்பர் திருக்குறுந்தொகையில் ஒரு பாசுரமும், ஓரேதன்மையாய் விஷயத்திற் காணப்படுகின்றன. இது தற்செயலாயுமிருக்கலாம், அல்லது ஒருவர் பாடும்போதுமற்றொருவர் பாடியதைஎண்ணிப் பாடியுமிருக்கலாம். அறிஞர் ஆராய்க. சுந்தரர் காலத்தில் எவ்வாறு செம்மையாய் விளங்கியதோ அவ்வாறே இத்திருப்பதி திருநாவுக்கரசர் காலத்திலும் † மங்கலவோசை நிறைந்து விளங்கியதாகும்.

இத்தலத்தில் அப்பர் பாடிய திருக்குறுந்தொகைப் பதிகங்கள் இரண்டு உள. ஒவ்வொரு பதிகமும் 10 பாக்க ளமைந்தது.

(37) திருவெண்ணி:—இதைத் திருவெண்ணியூர் என்றும் பகர்வர். இத்தலத்திற் சம்பந்தர் பதிகம் ஒன்றும், அப்பர் பதிகங்கள் இரண்டுமே தேவாரத்தி லுள.

---

* திருவாட்டியத்தான்குடி ஸ்டேஷனுக்குத் தென்மேற்கே 3 மைலில் திருப்பேரெயில் என்ற வங்காரம் பேரையூர் இருக்கின்றது. திருவாரூரிலிருந்து திருத்துறைப் பூண்டிக்குப் போகிற ரஸ்தாவில் சந்திக்குமிடத்திற்கு வடபுறத்தில் குன்னூரும், அதற்குக் கிழக்கே $2\frac{1}{2}$ மைலிலுள்ள ஆதமங்கலத்திற்கு வடக்கே $\frac{1}{2}$ மைலில் திருக்கன்றாப்பூரும் இருக்கின்றன.

† திருநெல்லிக்கா ஸ்டேஷனுக்குக் கிழக்கே 7 மைலில் திருக்கோளிலி என்ற திருக்குவளையும், அதனின்று தென்கிழக்கே 3 மைலில் தென் திருவாய்மூரு மிருக்கின்றன.

‡ அம்மாள்பேட்டை ஸ்டேஷனுக்கு வடக்கு $3\frac{1}{2}$மையில் திருவெண்ணி யென்கிற கோயில்வெண்ணி யிருக்கின்றது. ஷை ஸ்டேஷனுக்கு வடக்கு $3\frac{1}{2}$ மையில் (மத்தியில் வெண்ணாறுக்குப் பரிசு)-25-வது திரு அவளிவணல்லூர்.

$ நீடாமங்கலம் ஸ்டேஷனிலிருந்து தெற்கே மன்னார்குடிக்குப் போகிற கற்சாலையில் 2 மைலிலிருந்து மேல் பக்கமாய் $\frac{1}{2}$ மைலில் திருப்பூவனூர் இருக்கின்றது. இந்த ஸ்டேஷனுக்கு வடமேற்கே $3\frac{1}{2}$மைலில் திருவெண்ணி.

¶ கொரடாச்சேரி ஸ்டேஷனுக்கு வடக்கே 5 மையில் திருக்கொள்ளம்புதூர். இதற்கு $3\frac{1}{2}$ மைலில் திருக்குடவாயல். இதற்கு 2 மைல் வடக்கே காலூர். திருக்குடவாயிலிலிருந்து தென்கிழக்கே 5 மைலில் திருத்தலையலங்காடு. இதற்குக் குழிக்கரை ஸ்டேஷன், தென்கிழக்கில் 10 மைலிலிருக்கிறது.

\+ கணக்கி லாரையுங் கற்றுவல் லாரையும்
வணக்கி லாநெறி கண்டுகொண் டாரையும்
தணக்கு வார்தணிப் பாரெப் பொருளையும்
பிணக்கு வாரவர் பேரெயி லாளரே. (2)

சொரிவிப் பார்மழை சூழ்கதிர்த் திங்களை
விரிவிப் பார்வெயிற் பட்டவி வங்கொளி
எரிவிப் பார்தணிப் பாரெப் பொருளையும்
பிரிவிப் பாரவர் பேரெயி லாளரே. (3)
—திருப்பேரெயில்—திருக்குறுந்தொகை.

× முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனிற் றானோர் தலைமகன்
என்னை யாளு மிறையவ னெம்பிரான்
பின்னை யாரவர் பேரெயி லாளரே —ஷை —7

‡ உழைத்துந் துள்ளியு முள்ளத்து ளேயுரு
இழைத்து மெந்தை பிரானென் றிராப்பகல்
அழைக்கு மன்பின ராய வடியவர்
பிழைப்பு நீக்குவர் பேரெயி லாளரே —ஷை—8.

* நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய வன்புசெய்வோ மடனெஞ்சே யானுமம்
கேளாய்நங் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே.
—சம்பந்தர் 1.

நாளு நம்முடை நாள்க ளறிந்திலோம்
ஆளு நோய்களோ ரைம்பதோ டாறெட்டும்
ஏழை மைப்பட் டிருந்துநீர் நையாதே
கோளி லியான் பாதமே கூறுமே.
— அப்பர்-திருக்குறுந்தொகை 3.

† விழவி னோசை யொலியறாத் தண்பொழில்
பழகி னார்வினை தீர்க்கும் பழம்பதி
அழல்கை யானம ருந்திருக் கோளிலிக்
குழக னார்திருப் பாதந் தொழுமினே —ஷை—4.

[சுந்தரர் "செம் பொனின் மாளிகைசூழ் திருக்கோளிலி" என்றார். அவர் பதிகத்தில் 7-வதுபாசுரம் நோக்குக.]

அப்பர் திருத்தாண்டகப் பதிகத்தில் திருவெண்ணியிற் காணப்படும் சிவபெருமான், திருவாரூர், திருப்புன்கூர் முதலிய ஸ்தலங்களிற் காணப்படுகின்றவரே யென்றும், * உத்தமராய் எத்திசையு மன்னினரென்றுங் கூறுவர். அப்பர் திருக்குறுந்தொகையில் சில பாக்களும், அப்பதியின் சம்பந்தர் பாக்கள் சிலவும் ஒரே தன்மையாய் விளங்குகின்றன†.

(38) திருப்பூவனூர்:—இத்தலத்தில் அப்பர் பாடிய பதினொரு பாசுரங்களமைந்த திருக்குறுந்தொகைப் பதிகம் ஒன்றே திருமுறைகளில் காணப்படும். ஆயினும் இத்தலம் அப்பர் மிகவும் அன்பு செலுத்தி வழிபட்ட திருப்பதியெனக் கொள்ளலாம். இத்தலத்தில் இப்பதிகம் பாடியநாள் அப்பர் சமணத்தைக் கைவிட்ட நாள் கொண்டாடும் தினமாகும் ‡. இப்பதி "முக்கணனூர்" என்று சிறப்பித் தெடுக்கப்பட்டவற்றில் ஒன்றென ¶ அப்பர் கூறுகின்றார். இப்பதிகம் பாலைத்துறைகளைக் குறிப்பிற் காட்டுமாதலின் முக்கட் கடவுளைக் காளை $ யென்றும் அழைத்தனர் போலும். இப்பதிகம் மனிதன் எவ்வாறு பாசபந்தங்களை வென்று பரம்பொருளை யடையவேண்டியதற்கு இன்றியமையாத மனம், குணம், செயல் இவற்றின் இலக்கணங்களை இனிது விளக்கும். இப்பதி திருவெண்ணியின் தென்கரையி லுள்ளது.

(39) திருத்தலையாலங்காடு:—இத்திருப்பதியில் அப்பர் பத்துப் பாக்களமைந்த பதிகமொன்றே தேவாரத் திருமுறைகளிற் காணலாம். இது பாடிய நாள் திருவாதிரையோ வென + அனுமானிக்குமாறு முதற் பாசுரம் விளங்குகின்றது. இப்பெருமானைச் "சாராதே சாலநாள் போக்கினேனே" என இப்பதிகமுற்றும் திருநாவுக்கரசு வருந்துகின்றார். ஏனெனில் இவர் "கண்டளவிற் களிகூர்வார்க் கெளியான்" உலகுக்கு எல்லாம் தரும் பெரும்பொருள், பவனைப் பவனங்களனைத்துமாய தென்பர். இப்பதிகம் முற்றும் ஞானரசமொழுகா நிற்கும். ||

* வளங்கிளர்மா மதிசூடும் வேணி யாரும்
 வானவர்க்காய் நஞ்சுண்ட மைந்த னாரும்
 களங்கொளவென் சிந்தையுள்ளே மன்னி னாருங்
 கச்சியே கம்பத்தெங் கடவு ளாரும்
 உளங்குளிர வமுதூறி யண்ணிப் பாரு
 முத்தமரா யெத்திசையு மன்னி னாரும்
 விளங்கிளரும் வெண்மழுவொன் றேந்தி னாரும்
 வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே

திருவெண்ணியூர்:— திருநாவுக்கரசு - திருத்தாண்டகம். 9

† முத்தி னைப்பவ ளத்தை முளைத்தவெம்
 தொத்தி னைச்சுட ரைச்சுடர் போலொளிப்
 பித்த னைக்கொலு நஞ்சினை வானவர்
 நித்த னைநெரு நெற்கண்ட வெண்ணியே
 —ஷை அப்பர், திருக்குறுந்தொகை. 1.

முத்தினை முழுவயி ரத்தின் மாணிக்கத்
 தொத்தினைத் துளக்க மிலாத விளக்காய
 வித்தினை விண்ணவர் தாந்தொழு வெண்ணியில்
 அத்தனை யடையவல் லார்க்கில்லை யல்லவே
 —ஷை சம்பந்தர் 6.

‡ அப்பர்-திருப்பூவனூர்-திருக்குறுந்தொகை. 9.

¶ பூவ னூர்தண் புறம்பயம் பூம்பொழில்
 நாவ லூர்நன் னாரூறு நன்னிலம்
 கோவ லூர்குட வாயில் கொடுமுடி
 மூவ லூருமுக் கண்ணனூர் காண்மினே —ஷை—3.

புல்ல மூர்தியூர் பூவனூர் பூம்புனல்
 நல்லமூர் தியூர் நல்லூர் நனிபள்ளியூர்
 தில்லை யூர்திரு வாரூர்சீர் காழிநல்
 வல்ல மூரென வல்வினை மாயுமே —ஷை—5.

$ நார ணன்னொடு நான்முக னிந்திரன்
 நார ணன்கும ரன்வணங் குங்கழற்
 பூர ணன்றிருப் பூவனூர் மேவிய
 கார ணன்னெனை யாளுடைக் காளையே—ஷை—10.

\+ தொண்டர்க்குத் தூநெறியாய் நின்றான் றன்னைச்
 சூழ்நரகில் வீழாமே காப்பான் றன்னை
 அண்டத்துக் கப்பாலைக் கப்பா லானை
 யாதிரைநா ளாதரித்த வம்மான் றன்னை
 முண்டத்தின் முளைத்தெழுந்த தீயா னானை
 மூவுருவத் தோருருவாய் முதலாய் நின்ற
 தண்டத்திற் றலையாலங் காடன் றன்னைச்
 சாராதே சாலநாட் போக்கி னேனே
 —திருத்தலையாலங்காடு—திருத்தாண்டகம் 1.

|| பண்டளவு நரம்போசைப் பயனைப் பாலைப்
 படுபயனைக் கடுவெளியைக் கனலைக் காற்றைக்
 கண்டளவிற் களிகூர்வார்க் கெளியான் றன்னைக்
 காரணனை நாரணனைக் கமலத் தோனை
 எண்டளவி லென்னெஞ்சத் துள்ளே நின்ற
 வெம்மானைக் கைம்மாவி னுரிவை பேணும்
 தண்டானைத் தலையாலங் காடன் றன்னைச்
 சாரதே சாலநாள் போக்கி னேனே —ஷை—9.

கலைத்திறம் நுனிக்குங் கலைஞன்.

[The Critic as Artist—Oscar Wilde]

நன்மணங் கமழும் பூஞ்செடிகள் நாற்புறமுஞ் சூழ்ந்திருந்தவொரு மனையின்கண், நூல்வளம் மிகுந்த வாசகசாலையில் (Library) அமர்ந்து, கில்பர்ட்டு எர்னஸ்டு என்னும் இருநண்பர்கள், கலைகளைப்பற்றியும் கலையின் தரம்தேரும் திறத்தைப் பற்றியும் உரையாடுகின்றனர். அவர்களில் ஆஸ்கார் ஒயில்டு கில்பர்ட்டாயிருந்து கலைகளின் தரம்பார்த்து மதிக்கவல்லோன் பெருமையையும் தரம்பார்த்தலின் இலக்கணத்தையும் இங்கு விளக்கிவைக்கும் நேர்மையைக் கேட்கக் கற்றோர் இதயம் களிகூரும்.

இரு நண்பரும் வாசகசாலையில் அளவளாவி வருகையில் பேச்சு, காவியமாதி கலைகளைப்பற்றி மாறிற்று. எர்னஸ்டு என்பான், தரம்பார்த்து நல்லது கெட்டதென முடிவுகாணுதல் கலைவளர்ச்சிக்கு அவசியமில்லை என்றும், கலை செழித்துவளர்ந்த அந்நாளில் தரம் பார்க்கும் தொழில்கொண்டார் இலர் என்றும் கூறி வருங்கால், கில்பர்ட் இடைமறித்து, " இது போன்ற வாசகங்கள் எத்தனையோபலர் பன்முறை கூறக்கேட்டுளேன். மிகமிக நெருங்கிப் பழகுமோர் சினேகிதனால் விளையும் சலிப்பையும், தப்பான எண்ணங்களுக்

குள்ள செருக்கையுமே நான் இம்மொழிகளில் காண்கின்றேன்" என்றனன்.

இன்னவாறு பரிகாச மொழிபயிலும் நண்பனைப் பார்த்து எர்னஸ்டு, "நண்பா, நின்முகம் நகைகாட்ட நீயும் தலையாட்டிவிட்டதால் என் வாசகம் மறுத்ததாகுமோ. நான் சொல்வது உண்மை. கிரீஸ்தேயத்தில் கலைத்தெய்வம் தனிசுகொண்டது, கலைப்பொருளின் தரம் ஆய்பவர் இனம் தழைத்திருந்ததாலோ, சொல்வாய்!". சிற்பியின் கைவண்ணம் தீட்டிவைத்த உயிர்ப்பொலிவைப் பார்க்கப்பார்க்கப் பிரமித்து நிற்பவர்தம் சுவைபெருகு முள்ளத்தில் ஆராய்ச்சி பிறத்தலும் இயலுமோ ? உலகத்தில், ஆடவரும் மடவாரும் சிரித்துச் சிலர் சிலபோதும் வருந்திச் சிலர் சிலபோதும் நடமாடினர். புலவன் அன்னவரைக் கண்டான். அவ்வளவில் அவர்கள் இரகசியம் புலவனதாயிற்று. உடனே, உயிரும் ஒளியும் தந்து உலகத்தைப் புதுப்பித்தான். அப்புலவன் சிருஷ்டியை ஒருங்கே உட்கொள்ளாது, தரம்பார்ப்பது என்னும்பேரால் அவனது கற்பனையை எல்லைக் குட்படுத்திக் கலையைக்கொன்றுவீழ்த்தியபின் அச்சவத்தை வைத்துக்கொண்டு மாரடிப்பது பொருந்துமோ, நீயே சொல். இவ்வாராய்ச்சி, உவகைக்குப்பதிலாகக் கலகக்குழப்பத்தையே விளைத்து வைக்கும். கலைசெழித்த முன்னாளில் அதனைக் குலைத்துவைக்கும் ஆராய்ச்சி கிடையாது. கலைவளர்ச்சிக்குப் பொதுக்கூட்டங்களும் கூடியதில்லை. இது இந்நாள் நோய். உதடுவழிந்த வார்த்தைகளைக் கொட்டி மொழுகும் வர்த்தமானப் பத்திரிகைகளும் அந்நாள் இருந்ததில்லை. தான் அறிந்தது சிறிதேயென்று விலகித் தலைவணங்கி நிற்கவேண்டிய பத்திரிகைகளா இலக்கியங்களுக்கு மதிப்புரை [illegible]ரையக் கூடும் ? கிரீஸ்நாடு பெற்றிருந்த கலைச்சிறப்பிற்குக் காரணம் அந்நாள் மதிப்புரை கூறும் துன்மார்க்கம் இல்லாமையே யாகும்." என்று ஊக்கமொடு கூறினன்.

கில்பர்ட்:—(சிறிது சிரித்து,) "நண்பா, நீ கூறியவை கேட்பதற்குச் சுவையாக விருக்கின்றன. ஆனால் அறிவின் ஆழந்தான் நின்னுரைகளிற் சிறிதுமில்லை. (வர்த்தமானப் பத்திரிகைகள் கிடக்கட்டும். அற்பத்தனம் மிகமிக வர்த்தமானப் பத்திரிகைகளும் வளர்ந்து வருகின்றன. நமது விஷயமோ கலை.) கிரேக்கர் அனைவரும் ஆராய்ச்சி வல்லார் என்பதே நான் வற்புறுத்துவது. சொல்கின்றேன் கேள். கிரேக்கர் ஆயும் வல்லமை பெற்றவர். எவ்வாறு ஒன்றை ஆராய்ந்து பார்ப்பது என்றும் வகுத்துள்ளார் அவர். இதற்காக நாம் அவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளோம். கலைகளுள் பெரியவை வாழ்க்கையும், இலக்கியமும். வாழ்க்கை என்பது வாழ்வின் தன்மை; மற்று, வாழ்வின் பூரணமான விளக்கம் இலக்கியம். இவ்விரண்டின் இலக்கணத்தைக் கிரேக்கர் நமக்குத் தந்தனர். அதன் நுணுக்கத்தை வண்டிக்குப் பின்னே குதிரையைக்கட்டும் இந்நாளில் நம்மால் அறிவது இயலாது. செய்யுளொன்றை எடுத்துக் கொள்வோம். அதன் பொருளின் விழுப்பமும் ஓசைநயமும் அமைப்பினது அழகும் பற்றிக் கிரேக்க அறிஞர் தம் கருத்தைச் செலுத்தி இலக்கணம் கண்டனர்.......ஆனால் அச்சுத்தொழில் நம்மிடைப் பெரியோர் இட்ட சாபம்போல் புகுந்தது. புத்தகக் குப்பைகள் எங்கும் மலிந்தன. பாமர ஜனங்கள் படிக்கின்ற படிப்பில் நுனிப்புல்மேயும் பழக்கம் ஏற்பட்டது. இந்த நோய் எங்கும் பரவிப்பெருகவே கண்ணினால் பார்ப்பதே போதும் எனத்தக்க புத்தகங்கள் கிளம்பலாயின. காதிற்கும் அவைகளுக்கும் வெகுதூரம். கிரேக்கர்கள், ஓசையை எழுதுவதில் முக்கியமெனக் கருதினர். மில்டன் என்னும் பெருங்கவியும், பார்வையிழந்து அந்தகனாயபின் பாடிய நூல்களே சிறந்தன. ஒரு நூலை நாம் அனுபவிக்குங்காலையில், கதைக் கட்டும், சொல்முறையும், வளர்ச்சியும், அல்லவா நம்மைக் களிக்கச்செய்கின்றன. இதன் பொருளென்ன? ஆய்தல் அன்றோ! அரிஸ்டாடில், பிளேட்டோ போன்றவர் ஆகவே இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்தனர். நாம் ஒன்றைச் சிருஷ்டிக்குங்கால், ஆயும் அறிவும் அமையவில்லையெனின், அச்சிருஷ்டி உவப்பதற்கு இயன்றதொன்று ஆகாது. எனவே ஒவ்வொரு புலவனும் ஆராய்ச்சிவல்லவனே. இருப்பனவற்றை ஆய்ந்து சீரியவற்றை எடுத்துத் தொகுக்கும் உணர்வு புலவன்பால் இருப்பதால் அன்றோ நண்ப, வாழ்க்கையின் பூரணமாய விளக்கம் அவன் செய்துவைக்கின்றான் என்று அடிக்கடி நீ கூறுவதுண்டு. அச்சொற்றொடரின் பொருள்தான் என்ன? இருப்பனவற்றைக் காண்கின்றான்; சிலவற்றைத் தேர்ந்து எடுக்கின்றான்; தள்ளுகின்றான் சிலவற்றை; கூட்டிக் கொள்கின்றான் சிலவற்றை; இது ஆய்தல் அல்லாது வேறென்ன, சொல்வாய்? வாழ்க்கையைப் பற்றிய ஆராய்ச்சியே இலக்கியமென்றான் நம் மாத்யூ ஆர்னல்டு என்னும் அறிஞன். அது, அப்படியே ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்லாததெனினும், இலக்கியங்களை ஆய்ந்துரைவேண்டுவது எவ்வளவுமுக்கியமென்பதைக் காட்டுகின்ற தன்றோ?"

எர்னஸ்டு:—நீ சொல்வது சரி. ஆனால் தாம் பெற்றிருக்கின்றவொரு தரம்பார்க்கும் வன்மையால் இது செய்கின்றார் என்பதை அப்புலவர் அறியார்.

கில்பர்ட்:—அறிவர். உயர்ந்த நூல்கள் ஆவேசத்தில் பிறக்கவில்லை. இருக்கவேண்டியது இப்படி, இப்படியிப்படி இதை அமைத்தல் வேண்டும் என்று தெரிந்தே பெரிய நூல்கள் செய்யப்படுகின்றன. எப்பெரும் பாவலனும் பாடித்தான் தீரவேண்டும் என்ற காரணத்தால் பாடுவதில்லை. பாடித் தொலைப்பது சிறியவர் செயல். பெரும் புலவன் பாட விரும்புகின்றான், பாடுகிறான். "பண்டைக்காலத்தில், இயற்கை கலைபொளியுடன் திகழ்ந்தது; அப்போலோவும், கலைமகளும் நடமாடினர்; பார்த்தான் புலவன், தன்னையும் அறியாது பாடினான்" என்பது ஓர் அபவாதம். பண்டைப் பெரும் நூல்களெல்லாம் 'பெரும் காவியங்கள் பாடுவோம்' என்னும் எண்ணத்தினின்று பிறந்தவை. அந்த எண்ணம் இல்லாதவிடத்தில் அழகு குறையும், கலையில்லை. அவ்வெண்ணந்தான் ஆய்ந்தமைக்குந் திறமையைத் தருவது. மற்று, புலமையானது உருவம் பெறுமானால் அந்த உருவம் தந்தவனை அதனிற் காணவேண்டும். கலைக்கு உருவம் வேண்டும். உருவத்திற்குப் பாஷைவேண்டும். கதைத்தொடர்பும் ஒற்றுமையும் பின்னர் வேண்டும். இத்தொடர்பும் ஒற்றுமையும் ஆக்கியோனிடமிருந்து பிறத்தலின்றன. ஹோமர் பழங்கதைகளினின்று தன்காவியத்தை ஆக்கினான். ஷேக்ஸ்பியர் தேச சரிதையினின்றும், நாடக நூல்

களினின்றும் தன் நாடகங்களைச் சமைத்தார். ஆனால் அவை குயவனுக்கு மண் எப்படி உபயோகமா யிருக்கின்றதோ அவ்வகையிற்றான் இவர்களுக்கு உபயோகமாக விருந்தன. ஷேக்ஸ்பியரும், ஹோமரும் அக்கதைகளைத் தங்களதாக்கிப் புதிய உயிரும் உருவமும் தந்தனர். இலக்கியத்தை நுணுக்கமாய்ப் படித்து ஆய்வோர் இதை அறிவர். ஆய்தல் இல்லாது போனால், அவ்வாறு போனநாள்தொட்டுக் கலைவளர்ச்சியும் போய்விடும்.

ஆராய்ச்சி வலுத்துள்ளநாளில் கற்பனைத்திறம் இல்லாதிருப்பது மில்லை. ஆராய்ச்சியென்றால், மனிதன் ஈயத்தினின்று வெள்ளியைப்பிரிப்பதும், வெள்ளியினின்று தங்கத்தை எடுப்பது மாய வேலைகளில் பொருந்தித் தனது பணப்பெட்டி நிறையும்வகை முயல்வதன்று. சிருஷ்டிமாத்திரந்தான் இருந்தாலும் புதுமை போய்விடும். ஆராய்ச்சிதான் புதுப்புது வழிகளைக் காட்டும் பாவலன் புதியபுதிய சிருஷ்டியில் அமையலாம். ஆனால், இந்நாள் எங்கும்திரிகின்ற வர்த்தமானப் பத்திரிகைகளை நடத்திவருபவர் செய்யும் ஆராய்ச்சியும் எழுதும் மதிப்புரையும் கொள்ளத்தக்கனவென்று பாராட்டுகின்றவ னல்லன் நான். அத்தகையார், நூல்களை மதிப்பிடத் துவக்கியதால் தான் சிறந்த சிருஷ்டிக்கும் இடமில்லாது போயுளது. முட்டாளை முட்டாள் மதிப்பிடுவதும் போற்றுவதுமாய காட்சியைத்தான் நாம் இதுபோது இங்கிலாந்தில் காண்கின்றோம். ஆராய்ச்சி என்பது அதுவன்று. கற்பனைக்கு வேண்டிய பயிற்சியிலும், சிறந்த பயிற்சி ஆய்வதற்கு வேண்டும்

இந்தக் காலத்தில் பத்திரிகைகளில் மதிப்புரை எழுதுபவருக்கு மற்றொரு கஷ்டமும் இருக்கின்றது. எல்லோரும் நூல்கள் எழுதி விடுகின்றனர். எழுதுபவர்களுக்கு நாவல் என்றதொன்று அகப்பட்டுவிட்டது. இரண்டு பாகம் மூன்றுபாகம் என்று எழுதி விடுகின்றனர். வாழ்க்கை, இலக்கியம் இவைகளின் ஞானமோ சிறிதும் இவைகளை எழுதுவதற்கு வேண்டியதில்லை பத்திரிகைகாரர் ஏதாவதொரு மதிப்புரை எழுதித் தொலைக்கவேண்டி யிருக்கின்றது. மதிப்புரை எழுதுவோர் பெற்றுள பயிற்சியும் நூல் எழுதியவர் பெற்றிரார். இன்னொருவிஷயம்; மதிப்புரை எழுதுபவர்கள் புத்தகம் முழுவதையும் படிக்க முடிவதில்லை என்று சொல்லப்படுகின்றது இக் குப்பைகளைப் படிக்கவும் வேண்டுமோ ? ஒரு பானத்தை நல்லது கெட்டது என்று அறியவேண்டின் ஒருபுட்டி முழுதையும் குடிக்கவாவேண்டும்? பத்து நிமிட நேரத்தில் ஒரு புத்தகத்தை மதித்து விடலாம். ஆனால் எல்லோரும் ஒரே படியில்தா னிருக்கின்றனர். இவர் ஒரு புறமிருக்க வேறுசிலர்பால் செல்வோம் சில ஓவியக்காரர் முழுமனதொடு உழைக்கின்றனர் அன்னவர் கற்பனையைப்பற்றி ஆராய்ச்சி செய்வதை அவர் விரும்பார். ஆராய்ச்சியை அவர்கள் கடிகின்றனர். ஏன்? அவர்களுக்கும் கால அறிவிற்கும் சம்பந்தம கிடையாது. அவர்களது கையில் பிறந்தவை பார்ப்பவர்க்குப் புதுமையையும் களிப்பையும் தருவதில்லை. புதிய கருத்தும், அழகும், உணர்வும் அவைகளின்பால் இல்லை. எனவே அவைகளைப்பற்றி நாம் பேசத் தேவையில்லை சில காலத்தில் இறந்துவிடும்; அவை மடிய விடுவதே சரி. (தொடரும்).

மாறன் பாப் பாவினம்.

[487-வது பக்கத் தொடர்ச்சி]

வஞ்சிப்பா.

குறளடி வஞ்சிப்பா.

கறைவேல்விழி யிலவிதழிதழ்
நறைநாண்மலர் அம்புயமுகம்
புருவஞ்சிலை யுருவம்புப
லுருவம்புரி குழலெனமது
பொன்னங்* கொங்கைத்துணை
மின்னென்றுண ரிடைகண்டில
னெனவாங்குக்
கற்றறி வுடையவென் னிறையினைக் கலந்து
ணற்றிரு வுறைவிட நண்பா
சொற்றமிழ் மாறன் றுடரிவண் பொழிலே.

இஃதொன்றிய மொன்றுதும் வஞ்சித்தளையான் வந்து ஆறடித்தாய் 'எனவாங்கு' என்னுந் தனிச்சொற் பெற்று நேரிசை யாசிரியச் சுரிதகத்தா லிற்ற குறளடி வஞ்சிப்பா. அலங்காரம் - தொகையுவமை. பகுதி - பாங்கற் கூட்டம். துறை - இயல்பிடங் கூறல். 1

சிந்தடி வஞ்சிப்பா.

வான்றோய்கதிர திடற்றிகிரியை வலனேந்தியு
மீன்றோய்மதி மினிர்வலம்புரி யிடனேந்தியுங்
கவுத்துவமணி வனமாலிகை கவின்மார்பினிற்
பவுத்திரமுறு மலர்மாமகள் பயில்வாழ்வினின்
மகரக்குழை தழைநாதினன் மணிமௌலியின்
சிகரப்பஃ றலைசேர்வ மலைமேலுறை
செல்வனை
யனவர தழும்வரி யளிசெறி தளையவி
ழினமலர் தூயிறைஞ் சினர்பாற்
கனவினு முறான்கொடுங் கணிச்சி யோனே.

இது, ஆறடித்தாய்ச் 'செல்வனை' யென்னுந் தனிச்சொற் பெற்று, நேரிசை யாசிரியச் சுரிதகத்தா லிற்ற சிந்தடி வஞ்சிப்பா. திணை - பாடாண். துறை - கடவுள் வாழ்த்து. அலங்காரம் - பொருட்டன்மை. 2

* பொன்னங்குடங் கொங்கைத்துணை, எனவவ்வடி இருக்கலாம்.

குறளடி வஞ்சிப்பா.

பைம்பொற்குன்றே பணையிளவனமுலை
யம்புத்துணையே யரிமதருண்கண்
குனிசிலையிரண்டே கொடுநன்புருவம்
பனிமாமதியே பழிதீர்நன்முகங்
கொடியேதளரிடை கொண்மூவேகுழ
லாடரவின்பட மாமேகடிதடங்
காந்தளந்துணைமல ரவையேகையும்
பூந்தளிரன்றே புடைபெயர்மெல்லடி
நண்பா
படர்புகழ் மாறன் பராங்குசன்
றுடரிவண் பொழிலே தோகைய திடனே.

இது, பொதுச்சீர் பதினாறும் வந்து, 'நண்பா' வென்னுந் தனிச்சொற் பெற்று, ஆசிரியச் சுரிதகத்தா லிற்ற குறளடி வஞ்சிப்பா. இது, துறை - இயல்பிடங்கூறல். அலங்காரம் - நியம வுவமை. 3

வஞ்சித் தாழிசை.

(1) நறைமகிழ் மாற
னுறைநக ராடவர்
மறைமொழி நினைதொறு
நிறைக ளாறுமே.

(2) திருமகிழ் மாற
னருணக ராடவர்
வருடலை நினைதொறு
முருகுமென் னிறையே.

(3) பொன்மகிழ் மாற
னன்னக ராடவர்
முன்னுரை நினைதொறு
மென்னிறை யிலவே.

இவை, குறளடி நான்காய் மூன்று மொருபொருண் மேல் வந்தமையால் வஞ்சித்தாழிசை. பகுதி - பொருள்வயிற் பிரிதல். துறை - பிரிவு நினைந்திறங்கல். அலங்காரம் - சுவையினுள் அசைவுபற்றிய வழுகை. 4

வஞ்சித் துறை.

தண்டமிழ் மாறன்
வண்குரு கூரார்
நண்புற வாரார்
கண்டுயி லாவே.

இது, இருசீ ரடி நான்கினால் ஒரு பொருண்மேலொன்றாய் வந்தமையால் வஞ்சித்துறை. துறையு மலங்காரமு மிதுவுமது. 5

வஞ்சித் துறை.

நீர நாகமா
தார மாகமே
வார மாகமா
ணூர ணூகமா.

இதுவும் பாவது. துறை - கடவுள் வாழ்த்து. அலங்காரம் - சொல்லணியினுள் பிரிந்தெதிர் செய்யுள். அனுலோமப் பிரதிலோமமென வடநூலார் கூறுவது மிது. 6

வஞ்சித் துறை.

சதிதகண்ட ணூடீ
திததிகாண ஞானு
ததிதாகார கண்ட
கதிகாகிளா கான.

இதுவுமது. துறையுமது. அலங்காரம் - சொல்லணியினுள் சுழிகுளம். 7

வஞ்சி விருத்தம்.

கொந்தார் திருமகிழ் மார்பினர்
செந்தா மரையடி சேர்பவர்
தந்தா வளமுரை நாரண
னந்தா மந்தனை யாள்வரே.

இது, சிந்தடி நான்காய் வந்தமையான் வஞ்சிவிருத்தம். துறை - இதுவுமது. அலங்காரம் - சுவையினுள் கல்விபற்றி வந்த பெருமிதம், 8

வஞ்சிப்பாவும் வஞ்சிப்பா வினமு முற்றிற்று.

மருட்பா.

கைக்கிளை மருட்பா.

வாய்ந்த மகிழ்மாறன் மால்வரைமான் கண்ணிமைக்கு
மோந்தகழு நீர்மென் முகைவாடும் - பூந்தளிர்க்
கானிலம் படர்தலுங் கண்டன
மானிட மகளோ யணங்கலன் மனனே.

இது, கைக்கிளை மருட்பா. பகுதி - இயற்கை. துறை தெளிதல். அலங்காரம் - சந்தயத்தினுள் நிச்சயாந்தம். 1

புறநிலைவாழ்த்து மருட்பா.

தேவர் பெருமான் றிருப்பாற் கடல்கடைந்தோன்
மூவ ரெனவாழ் முதல்வ னனைத்துயிர்க்குங்
காவல் புரிவானிற் காக்கவெயர் வாக்குந்
தண்ணளி புரிமகிழ் மாற தகியரி
ஞெண்ணிதிச் செல்வம துடனீ
மண்மிசை வாழி மதிநலந் தழைந்தே.

இது, புறநிலைவாழ்த்து மருட்பா. திணை - பாடாண். துறை - புறநிலைவாழ்த்து. அலங்காரம் - வாழ்த்து. 2

வாயுறைவாழ்த்து மருட்பா.

பொய்தீர் புலவிர்காண் மாறன் பொருளுரைதேர்ந்
தெய்தீரெய் தாது மிருந்திலீர் மெய்யாக
வின்பமுடன் றுன்ப மிழவுபே றென்பவைதா
முன்பிழைத்த வூழான் முறைபிறழா தென்பதறீர்
மானிடம் பாடி மதியாது பொய்சொல்லி
யீன விளிவரவா லெற்றுண்டு போனதுநாட்
கூற்றுவன் செய்யுங் கொடுந்தொழிலுந் தீநரகி
னூற்ற லவைகேட்டு மடங்கிலீர் பாற்கடற்
பூரணன் மலர்மகள் புரவல னகில
காரணன் வடவேங் கடவ
னூரணன் கழலினிப் பரவுமின் னயந்தே.

இது, வாயுறை வாழ்த்து மருட்பா. திணை - பாடாண். துறை - வாயுறைவாழ்த்து; அல்லது, பொருண்மொழிக் காஞ்சி. எனின், அலங்காரம் - சுவையினுள் கல்விபற்றிய பெருமிதம். 3

செவியறிவுறூஉ மருட்பா.

திருமால் பரனெனவே தேற்றுதற்கன் பாக
வருமாரி யன்றனையிம் மண்மேற் புலவீ
ரொருமா னிடனென் றுணரா தவனெம்
பெருமானு மென்னுற்ற பெம்மா னருள்கூர்
பத்தர தடியிணை பரவுமின் னதுவே
யுத்தம விலக்கண முரைசால்
முத்தியை விளைக்கு முயற்சியு மதுவே.

இது, செவியறிவுறூஉ மருட்பா. இதுவுந் திணையுந் துறையு மலங்காரமு மது. 4

மருட்பா முற்றிற்று.

பாப்பாவின முற்றும்.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

14. வரைக்காட்சிப் படலம்.

[496 வது பக்கத் தொடர்ச்சி]

உணர்வா ருய்ந்தார் நுகர்பவர் னைந்தார்.

நுகர்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் உள்ளவோர் நுண்ணிய வேறுபாட்டின் தன்மையை நினைவினிற் கொள்ளாக்கால், எழுச்சிப்படலம்முதல் உலாவியற் படலமீறாக அமைந்துள்ள பாசுரங்களில் தோன்றும் பல செய்திகளைக் கம்பரேயாய இப்புலவர்பிரான் நிகழ்த்திக் காட்டவொண்ணுமோ என்னுமோரச்சம் எவர்க்கும் பிறக்கலாம். உலகினிலினி யிடமிலையென வொருங்கெழுந்தவவ் வலங்கல்வீரரும் மணியிழை மாதரும் தம் மனங்கள் கைகோப்ப வழிநடந்தவாறு கண்டோம். அந்தச் சூழ்ச்சி, சந்திரசயிலத்தில் இவர் வந்து இறங்குங்காலையில் மெய்யுற நெருங்கிவிடும் வண்ணம் முதிர்ந்ததோர் செவ்வியைப் பெற்றது. இதனால், இனி அவ்வனிகந்தன்னுள் நிகழ்வதற்குளவாய காமச்செயல்களுக்கு ஓர் அறிகுறி அமைத்தாலென்ன,

கோவை யார்வடக் கொழுங்குவ டொடிதர நிவந்த
ஆவி வேட்டன வரிசிலை யனங்கன்மேற் கொண்ட
பூவை வாய்ச்சியர் முலைசிலர் புயத்தொடும் பூட்டத்
தேவ தாரத்துஞ் சந்தினும் பூட்டின சிலமா

[ஆகாயத்தையளாவிய வடக்கிலுள்ள செழிப்பான மேருமலை நிகராகாது தோற்றுப்போம்படி உயர்ந்தனவும், ஆடவர்களது ஆவியை உண்ண விரும்புவனவும், கட்டமைந்த வில்லேந்திய மன்மதன் உருவத்தைத் தம்மேல் தொய்யிலாக எழுதப்பெற்றனவும் ஆகிய, நாகணவாய்ப்புள் போல் பேசும் மாதர்களது முலைகள், சில ஆடவர்களது புயங்களுடன் அணையும்படி அவர் யானையிலிருந்து இறங்கியபின், வரிசையாக அமைந்த ஆலமரத்தின் செழிப்பான கிளைகள் ஒடியும்படி உயர்ந்தனவும், தடாகத்தை விரும்பினவும் கட்டமைந்த வில்லைத்தாங்கிய மன்மதன் போன்ற ஆடவர்களைத் தம்மேல் கொண்டிருந்தனவும் ஆய அந்த யானைகள் தேவதார மரங்களிலும் சந்தன மரங்களிலும் கட்டப்பட்டன.]

என்று செம்மொழிச்சிலேடையின் நயமும் திரண்டிருக்க இப்படலத்தின் முதற்செய்யுள் பாடினர் கம்பர். ஆற்று நீரிடை அங்கைகளா லெடுத்து ஏற்று [illegible]ணும் யானையின் றிறக்கிவிட்ட இத்தோன்றலார் [illegible]வய ருறவை யூன்றப் பெற்றனர். வரையினைக் கண்[illegible] பூக்கள் கொய்தும் தெண்ணீர் குடைந்தும் மதுவினையுண்டும் விளையாடுங்கால் இவ்வரசமாந்தர் அனங்கனது ஆட்சியில் புரிவதற்குள காமத்தொழில்கள் இனிப் பற்பல. காமத்தின் ஆட்டமெல்லாம் இவ்வாறு நிகழ்த்திக் காட்டினால் காண்பவர் மனங்கள் நெறிபிகந்து இழியாவோ என்று அயிர்ப்பதன்முன் கம்பரொருவரே யன்றியும், நல்லொழுக்கத்திற்கோர் உயிரெனும் மாண்புடைய ஹோமர் காளிதாஸன் ஷேக்ஸ்பியர் திருவள்ளுவர் வாதவூரடிகள் அனையவரெத்தனையோ பலர், இன்பத்தின் வைப்பாய காமச்சுவையினை ஆதரித்துத் தம் நூல்களை நயம்செய நல்கூர்ந்தாரலர் என்பதனை மறத்தலாகாது. காமச்சுவையன்றி வேறொன்றைக் கூறுவதற்குமாற்றாத போஜராஜன் சீலமும் சிறந்த மதியும் வாய்ந்தவனேயாவன். இறையனாரே அகப்பொருளிலக்கணம் வரைந்தருளினாரெனக் கூறுவதும் அறியாதார் மொழியன்று. காவியங்களின் கனிந்திளகிய செம்பாகம் காமச்சுவை. இச்சுவையைப் பாடுவோன் உண்மையாய கலையுணர்வுடையவனாயின், அந் நாலிற்கும் பழுதில்லை, அந்நூலை ஓதுவோர்க்கும் நலமேயன்றித் தீங்கிலது. கலையுணர்வு கைம்மிகப் புனையவல்ல மாபெரும் புலமையோர் காமத்தைப் பகருங்கால் கேட்போர் கருத்து இன்பத்தால் இளகுவதல்லால் இழிந்த நினைவிற்கும் செயலிற்கும் இடம் தந்ததாகாது. புலமையால் பெரியவர் புகன்ற நூல்களைப் படித்ததால் காமுகராகிக் கெட்டாரிவர் என்று சுட்டுதற்கும் ஒருவர் எங்குளர்! காமுகக்கள்வரெனக் கிடந்துழல்வோர் அனைவரும், அந்தரம்நோக்கில், இந்நூல்களைக் கேட்டுமறியாப் பேதையர்களாகவே இருப்பர் திண்ணம். இன்னதற்குத் தக்க காரணமும் உளது.

சிற்றின்பம் என்று சொல்லப்படுவன வொன்றும் உண்மையில் ஒரு சிறிதும் இன்பந்தருந் தன்மைத்தன்று. இவைகளைத் துய்ப்பதற் கவாவுங் காலத்திலும் துன்பம், துய்க்குங் காலத்திலுந் துன்பம், துய்த்தபின்புந் துன்பமே. சிறிது மின்பமற்றுப் பெரிதுந் துன்பத்தைத் தருகின்ற இவைகளைச் சிற்றின்பமென்று அழைப்பதும் ஒருவகை எதிர்மறை இலக்கணை என்னக்கூறலாம். உணர்ச்சி வேறு, நுகர்ச்சி வேறு. இன்பம் என்பது உணர்ச்சிக்கே உரியவோர் தத்துவம். பொருளின் நுகர்ச்சியால் இன்பம் எய்துதல் எந்நாளும் இயலாது. இன்பத்திற்கோர் உணர்ச்சி உள்ளத்திலிருக்குங்காறு மொருவனு மிழிதகைக் கயவனாகமாட்டான். இவ்வுணர்ச்சி யற்றவர்களே நுகர்வதால் இன்பம் பெற்றிடவெண்ணிப் பொருளைத் தொடர்கின்றார். இன்னவர்க்கும் இன்பத்திற்கும் இடைகிடப்பது வெகுதூரம். இவ்வாறு பொறிகளைப் பொருள்களின்பால் உய்ப்பது அவாவேயன்றி உணர்வன்று. நசைபற்றி நயந்தோர் யாரும் நிரம்பப் பெறார். ஆதலின், அவாவிய இன்பம் ஒன்றும், நுகர்ந்ததால் எய்தாதாக, அக்குறை நுகர்ந்த பொருளினதென்று மளவினதென்றும் பொய்மதிப்புற்று மேன்மேலும் தேடித் தம் புலன்களுக்குள் மாக்களாயினோர் பெய்துகொள்கின்றனர். இதனால் அவர்களது உள்ளம் கைத்திடலாகின்றதேயன்றி வேறன்று. இருட்டறையில் பிணந்தழுவிய வெறுப்புற்றழிகின்றாரல்லாது அவர் இன்பமென்பதை ஒருநாளும் எய்தியறியார். நுகர்வதால் இன்பம்பெற நேர்ந்தார்க்குறும் நொய்மை இது சரதமாயினும் கல்லாப் புல்லோர் அதன் காரணத்தை ஓராராய்ப் பெண்மோகத்திலும் கள்ளிலும் நாவின்நசையிலும் ஆழ்ந்துழலலாகின்றனர். இன்பத்தின் உணர்ச்சி இவர் மனத்தில் ஒருநாளும் எழுந்ததில்லை; எழுந்திடுமாறு அவர் பழகியதுமில்லை. இன்பம் நிறைந்த உள்ளத்தவர் அதனை அயலொரு பொருளின் நுகர்ச்சியால் பெறவேண்டுமென முயன்றிரார்.

இன்பத்தின் உணர்ச்சியும், மற்றைய உணர்ச்சிகளைப் போன்றே ஒவ்வொருவரிடத்தும் ஒருசிறிது இயற்கையா யமைந்திருக்கும். இனி, இயற்கையாயமைந்த மற்றெவையும்போல் பயிற்சியுண்டெனின் இவ்வுணர்ச்சி வளர்ந்து பெருகுவதும், இன்றெனின் நசித்து மாய்வதுமாகி முடிகின்றது. அப்பயிற்சிக்குரிய சாதனங்களுள் மிக்க எளியதும் இனியதுமாய்க் கைதரவல்லன கலைத்திறத்தில் துறைபோகிய புலமையோர் காமச்சுவையினால் புனைந்தமைத்தவிச் சித்திரக் காட்சிகள். இச்சித்திரங்களோடு பயிலுங்கால் நம்முடைய மனத்தில் மாசற்றஇன்பமேபெருகுகின்றது. கலைநூல்களுள் நடிக்கும் காதலர்களது வடிவினையேனும் செயலினையேனும் மென்மொழிகளையேனும் நயந்து அழுக்காறடைவது அருமை. கலைவண்ணம் இருந்தவாறு இது. கலைநுட்பந் தேர்ந்தார் வகுத்துக் காட்டிய காமச்சுவையினைக் கற்பவர், அழுக்காறும் அவாவும் இன்றி, அச்சுவையினுக்கு இலக்காய பாத்திரங்களின் அழகையும், காதற்கனிந்த மொழியையும் தொழிலையும் உன்னுந்தோறும் இன்பத்தின் உணர்ச்சி பெருகிய மனத்தவராகின்றோம். இவ்விதம் பிறர் இன்புறக்கண்டு தாம் இன்புறப் பயில்வோரே, பின்னுள் தாமின்புறுவது உலகின்புறக்கண்டு காமுறும் கற்றறிந்தாராதற் கொத்தவர்

நேற்றை நினைத்திரங்குவதும் நாளைக் கென்னுமென அஞ்சுவதும் அற்றவோர் வாழ்க்கையர். செல்வம் குலம் கல்வி வீரம் அழகு யாவும் வாய்ந்தவர். எந்தை வில்லிறுத்தானெனும் உவகையால் கிளர்ந்தவர். பல்லியங்கள் உடன் இசைக்கச் சிவிகையும் பிடியும் பரிமாவு மூர்ந்து போந்தவர். உயிரிற் குயிராய அன்பினர். வழிக்கொண்டாரிவர் இயற்கைவனப்புப் பொலிதரும் வரையின்கண் வந்துசேர, வரிசிலை அனங்கனன்னான் பூவையைப் பொருவும் வாயள் ஒருத்தியை அவள் முலைமுகடு தன் புயத்தினி லழுந்தற அணைத்துக் களிறுநின் றிறக்குகின்றான். இறக்குவது நோக்கமாயின் அணைத்திருந்த நேரமும் வன்மையும் அளவினால் மிகை. இனிது இனிது இவர்நிலை இனிது. இவ்வினிமையைக்கவியின் மொழியினால் நினைக்கக் கற்றவர் மனத்தினில் இன்பம் மலர்கின்றது. இன்பம் மலர்ந்தமனம் பழுதுற இழிந்திடாது. இலக்கணையும் சீவகனும் புக்கிருந்த பள்ளியறைச் செய்திபைத் திருத்தக்க தேவர்,

தாம மார்பனுந் தையலு மெய்யுணர்
வாமி தென்றறி யாது களித்தவர்
தாமங் கொப்புளிக் குந்துகிற் சேக்கைமேற்
காமனைப்பணைக் கள்ளுக வைகினர்

[மாலையணிந்த மார்பினனாய சீவகனும், இலக்கணையும் தம் உடலோ அல்லது உணர்வோ கலக்கின்றனவென்று அறியாது களித்தவராகி, வாசனைப்புகை கமழும் துகில் விரித்த படுக்கையில், காமனது அம்புகளாகிய மலர்களின் மீது அவைகளினின்று தேன் கசியும்படி அமர்ந்தார்]

என்று சித்தரித்துக் காட்டும்போது, அன்னவர் உற்ற இன்பத்தைக் காண நாமும் இன்புறுகின்றோம். இச்செய்யுளிற்கு உரைகண்ட நச்சினார்க்கினியர், "மெய்யுணர்வாம் இது என்று அறியாது களித்தவர்" என்பதற்கு "இது தம் உடம்பென்று உணரும் உணர்வறியாது ஒருவர் மெய்யில் ஒருவர் மெய்மயங்கிக் களித்தவர்" என்னப் பொருள்கூறினாரெனினும், புணர்தலாகிய இது தம் மெய்யோ மற்று உணர்வேதானோ வென்று அவர் அறிந்திலர் எனக்கொள்வது இச்செய்யுளின் அமைப்பிற்கு ஏற்றதாயிருப்பதுடன் காமச்சுவையையும் சிறிது உயர்த்தித்தர வல்லதாம். உணர்வு ஒன்றிய செவ்வியினைச் சிந்தித் தின்புற்றவர் பின் யாக்கைக்கு இரையாகச் சில நாடி அயலே திரிவதென்ப தமையாது.

இடக்கரை அடக்காது உரைப்பதற்கு எல்லைதான் இதன்மே லுண்டோ என்னும்படி கவிச்சக்ரவர்த்தி ஜயங்கொண்டார் பாடிய தாழிசைகள் சில இங்கு நினைத்தற்கொத்தன. காமச்சுவைக்கும் அவைகளே எல்லை என்னலாம். போர்மேற் சென்றிருந்த தம் காதலர் திரும்புதலின்றிக் காலம் தாழ்த்தாரெனப் புலந்த மங்கைமார், அவர்க்கு இடந்தராது தாழ்கோலிட்டுத் தம் அகத்திருக்க இச்சயங்கொண்டார்,

விடுமி னெங்கடுகில் விடுமி னென்றமுனி
  வெகுளி மென்குலைத் துகிலினைப்
பிடிமி னென்றபொருள் விளைய நின்றருள்
  பெடைந வீர்கள்கடை திறமினோ

[நீங்கள் கோபித்தவர்போல் மொழிகின்ற குதலைச் சொற்கள், "விடுங்கள் எங்கள் வஸ்திரத்தை விட்டுவிடுங்கள்" என்பனவேயானாலும் அவை, 'பிடித்துக்கொள்ளுங்கள்' என்ற பொருளே படும்படி நின்று உங்கள் அன்பர்களுக்கு அருள் செய்தன அன்னம்போன்ற அழகுடைய மாதர்காள் இப்பொழுது கதவைத்திறவுங்கள்]

என்று ஓர் மனையெதிர் நின்றும்,

எனது டங்கவினி வளவ துங்கனரு
    ளெனம கிழ்ந்திரவு கனவினிற்
றனது டங்கண்மிசை நகந டந்தகுறி
    தடவு மாதர்கடை திறமினோ

['எங்காதலர் அன்பு அனைத்தும் இனி எமது எமது' எனக் கூடியது இரவின்கண் நிகழ்ந்த கனவில் நேர்ந்ததென்று ஓராமல்,கலவியில் உங்கள் நாயகர் செய்த நகக்குறிகள் எங்கே எங்கே என்று முலைகளைத் தடவிப்பார்த்துக் கொள்ளும் மாதர்காள், இப்பொழுது கதவைத் திறவுங்கள்]

என்று மற்றோர் மனைக்கருகும்,

முத்து வடஞ்சேர் முகிழ்முலைமேல்
  முயங்குங் கொழுநர் மணிச்செவ்வாய்
வைத்த பவள வடம்புனைவீர்
  வனைபொற் கபாடந் திறமினோ

[முத்துமாலை அணிந்த உங்கள் குவிந்த முலைகளின் மேல் முயங்கிய நாயகர்,தம் அழகிய சிவந்த வாய்வைத்துச் செய்த பற்குறிகளால் சிவந்திருக்குமிடங்கள் பவளமாலை அணிந்தாப்போல் தோன்றப்பெற்ற நங்கைமீர், உங்கள் பொன் கதவைத் திறவுங்கள்]

என்று அயல்மனை யொன்றை அண்மியும்,

கலவிக் களியின் மயக்கத்தே
  கலைபோ யகன்ற தறியாமல்
நிலவைத் துகிலென் றெடுத்துடுப்பீர்
  நிறைபொற் கபாடந் திறமினோ

[வஸ்திரம் நெகிழ்ந்து அகன்றது அறியாமல், புணர்ச்சியாலுண்டான களிப்பின் மயக்கத்தினால், வெண் நிலவை உங்கள் துகிலென்று நினைத்து உடுத்திக்கொள்ளும் பேதை மாதர்காள், இப்பொழுது கதவைத் திறவுங்கள்]

என்று இன்னொருத்தி முன்றிலுமாக, அவ்வரசவீதியின் மாளிகைதோறும் நின்று வாயில்வேண்டிய நயமொழிகளைப் பயிலப்பயில மாந்தர் தம் உடலை அறவே மறந்து இன்பமேநிறைந் திளகிய உணர்வினராவார்.

தமிழ்ப் பாடம் 78.

[அஷ்ட பிரபந்தம்.]

திருவேங்கடமாலை.

திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்துமாலை, திருவரங்கக் கலம்பகம், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, சீரங்கநாயகர் ஊசல், என்னும் இவ்வெட்டு நூல்களுக்கும் அஷ்டபிரபந்தம் என்று பெயர். இதனைப்பாடிய திவ்ய கவி பிள்ளைபெருமாள் ஐயங்கார். அழகிய மணவாளதாசர் என்ற பெயருமுடைய இவர் இற்றைக்கு எழுநூறு வருடங்களுக்குமுன் இருந்தவர். திருமாலினிடத்தில் இவர் கொண்டிருந்த அன்பிற்கு அளவில்லை. இவரது பாசுரங்கள் இனிமை மிகுந்திருப்பதோடு தமிழ்ப்பயிற்சி செய்விக்கும் திறத்திலும் மிகச் சிறந்தவை.

அஷ்டபிரபந்தத்தில் திருவேங்கடமாலை என்னும் நூலை இப்பொழுது நமது பாடத்திற்கு எடுத்துக் கொள்வோம். இதுவரையில் கற்றிருக்கின்ற அணிகளின் இலக்கணத்தை இந்நூலில் நன்கு பயிலலாம் சொல், தொடர் முதலிய இலக்கணங்களையும்பயின்று வருவதோடு இவ்வஷ்டபிரபந்தம் முடிவதற்குள் புணரிலக்கணமும் செய்யுளிலக்கணத்தில் முக்கியமாக அறிந்துகொள்ள வேண்டிய சில விஷயங்களையும் கற்றுக்கொள்ள இயலும். எல்லாச் செய்யுள்களையும் நாம் பாடத்திற்கு எடுத்துக்கொள்ள நினைக்கவில்லை. இங்கு எடுத்துப் போதிக்கப்பெறும் செய்யுள்கள் தவிர மற்றவைகளையும் ஊக்கமுடையவர் தாமே ஓதிக் கொள்வது நலம்.

> பொன்னு மணியும் பொலிந்தோங்கிப் பார்மகட்கு
> மின்னு மணிமுடியாம் வேங்கடமே—மன்னும்
> பரமபத நாட்டினன் பையரவின் சூட்டிற்
> சிரமபத நாட்டினன் சேர்வு. 1

பதப்பிரிவு:—பொன்னும் மணியும் பொலிந்து ஓங்கி பார் மகட்கு மின்னும் மணி முடி ஆம் வேங்கடம் ஏ மன்னும் பரமபதம் நாட்டினன் பை அரவின் சூட்டில் சிரம பத நாட்டினன் சேர்வு.

பதவுரை:—பொன்னும் - பொன்னும், மணியும் - இரத்தினங்களும், பொலிந்து - மிகவும் விளங்க, ஓங்கி - உயர்ந்து இருப்பதனால், பார் மகட்கு - பூமிதேவிக்கு, மின்னும் - பிரகாசிக்கின்ற, மணி - இரத்தினங்கள் இழைத்த, முடி ஆம் - கிரீடம்போன்ற, வேங்கடம் ஏ - திருவேங்கடமலையே,

மன்னும் - நிலைபெற்ற, பரமபதம் - பரமபதமாகிய நாட்டினன் - நாட்டை உடையவனும்,

பை - படத்தையுடைய, அரவின் - பாம்பினது, சூட்டில் - கொண்டையில், சிரமம் - நடனம் செய்கின்ற, பதம் - தன்னுடைய பாதங்களை, நாட்டினன் - அழுத்தினவனுமாகிய திருமால்,

சேர்வு - சேர்ந்து இருக்கும் இடம் ஆகும்.

கருத்து:—பூமாதேவிக்குக் கிரீடம்போல் உயர்ந்து விளங்குகின்ற திருவேங்கடமலையேதான், பரமபதநாதனும் காளிங்க நர்த்தனம் செய்தவனுமாகிய திருமால் விரும்பி அடைந்திருக்கின்ற இடம் ஆகும்.

விளக்கம்:—சேர்வு - சேர்ந்திருக்கும் இடம். (யார் சேர்ந்திருக்கும் இடம்? திருமால் சேர்வு). அத்திருமால் எப்படிப்பட்டவன்? நாட்டினன் - வைத்து அழுத்தினவன். எதை நாட்டினன்? பதம் நாட்டினன் - பாதங்களை அழுத்தினவன். எந்தப் பாதங்களை நாட்டினன்? சிரமபதம் - நடனம் செய்வதாகிய சிரமம் அல்லது முயற்சியை உடைய பாதங்களை. சிரமபதம் எங்கே நாட்டினன்? சூட்டில் - கொண்டையில். எதன் சூட்டில்? அரவின் சூட்டில் - பாம்பின் கொண்டையில். எதை உடைய அரவின் சூட்டில்? பை அரவின் சூட்டில் - படத்தை உடைய பாம்பின் கொண்டையில்,

படத்தை உடைய பாம்பினது கொண்டையில் தன் நர்த்தனம் செய்கின்ற பாதங்களை அழுத்தினவனாகிய திருமால், இன்னும் எப்படிப்பட்டவன்? நாட்டினன் - நாட்டை உடையவன். எந்த நாட்டினன்? பரமபத நாட்டினன் - பரமபதமென்னும் நாட்டையுடையவன். அப்பரமபதம் எப்படிப்பட்டது? மன்னும் பரமபதம் - நிலைபெற்ற பரமபதம்.

நிலைபெற்ற பரமபத நாட்டை உடையவனும், படத்தை உடைய பாம்பின் கொண்டையில் நர்த்தனம் செய்கின்ற தன் கால்களை வைத்து அழுத்தினவனுமாகிய திருமால் மகிழ்ந்து தங்குகின்ற இடம் எது? வேங்கடமே - திருவேங்கடமலைதான். அவ்வேங்கடம் எது போன்றது? முடி ஆம் வேங்கடம் - கிரீடம் போன்ற வேங்கடம். எதனை இழைத்த முடி போன்றது அவ்வேங்கடம்? மணி முடி ஆம் வேங்கடம் - இரத்தினங்கள் இழைத்த முடிபோன்ற வேங்கடம். எத்தகைய மணிமுடி? மின்னும் மணிமுடி - பிரகாசிக்கின்ற இரத்தினங்களிழைத்த கிரீடம். யாருக்கு மணிமுடிபோல் வேங்கடமலை இருக்கின்றது? பார் மகட்கு - பூமிதேவிக்கு எதனால் திருவேங்கடமலை பூமிதேவிக்கு இரத்தின கிரீடம்போல் இருக்கின்றது? ஓங்கி - உயர்ந்திருப்பதால் எப்படி ஓங்கியிருப்பதால்? பொலிந்து ஓங்கி - விளக்கமுற ஓங்கியிருப்பதால் எவை பொலிந்து ஓங்கி யிருத்தலால் வேங்கடம் நிலமகள் மகுடம்போல் இருக்கின்றது? பொன்னும் மணியும் - பொன்னும் இரத்தினங்களும்.

விரிவுரை.—காளிங்கன் என்பவன் ஒரு நாகன். இவன் யமுனையாற்றின் ஓர் மடுவில் இருந்துகொண்டு அதன் நீரை விஷமாக்குவதும் அதில் இறங்குகின்றவர்களைக் கொல்வதுமாக இருந்தான். கிருஷ்ணன் ஈதறிந்து ஒருநாள் அம்மடுவில் குதிக்க மேலெழுந்த காளிங்களனது தலையின்மீது நடனஞ்செய்து அவனை நசுக்கிவிடும் சமயத்தில் அவன் மனைவியர் வேண்டுகோளிற்கிணங்கி அவனைக் கொல்லாது விட்டான். "பை அரவின் சூட்டில் சிரமபதம் நாட்டினன்" என்பதில் அடங்கியுள்ள கதைக் குறிப்பு இது.

திருவேங்கடமாலை,நளவெண்பாவைப்போல்தொடர்நிலைச் செய்யுள்களால் ஆகிய நூலன்று. ஒன்றோடொன்று கதையினாலேனும் வேறு விஷயங்களின் சம்பந்தத்தினாலேனும் அர்த்தத்தொடர்புடைய செய்

யுள்கள் தொடர்நிலைச்செய்யுள்கள் எனப்படும். திருவேங்கடமாலையில் அடங்கியுள்ள நூறு செய்யுள்களும் அவ்வாறு விஷயத்தினாலேனும் கதையினாலேனும் ஒன்றைப்பற்றி ஒன்று தொடர்ந்திருக்கவில்லை. அதுஅது தன்வரையில் முடிவுபெற்ற பொருளையுடையது. எல்லாம், திருமாலையும் அத்திருமால் உகந்துவைகும் திருவேங்கடமலையையும் துதிக்கும் கருத்து உடையனவைகளாயிருக்கின்றன வென்பது அல்லாமல் அவைகளுக்குள் தொடர்பு காணமுடியாது. இப்படி ஒரேவிஷயத்தை முன்னிட்டுப் பல பாடல்கள் அமைந்த நூலுக்கு மாலை என்பது பெயர்.

> சோதிமதி வந்துதவழ் சோலைமலை யோடிரண்டாய்
> மேதினியாள் கொங்கைநிகர் வேங்கடமே-போதி
> லிருப்பாற் கடலா னிபமூர்ந்தார்க் கெட்டாத்
> திருப்பாற் கடலான் சிலம்பு. 2

பதப்பிரிவு:—சோதி மதி வந்து தவழ் சோலைமலையோடு இரண்டு ஆய் மேதினியாள் கொங்கை நிகர் வேங்கடம் ஏ போதில் இருப்பாற்கு அடல் ஆன் இபம் ஊர்ந்தார்க்கு எட்டா திரு பால் கடலான் சிலம்பு.

பதவுரை:—சோதி - பிரகாசம் பொருந்திய, மதி - சந்திரன், வந்து - வந்து, தவழ் - தவழ்கின்ற, சோலைமலையோடு - திருமாலிருஞ்சோலை என்னும் மலையோடு, சேர்ந்து - இணையாகி, மேதினியாள் - பூமிதேவியின், கொங்கை - முலையை, நிகர் - போன்ற, வேங்கடம் - திருவேங்கடமலையானது,

போதில் - தாமரை மலரில், இருப்பாற்கு - இருப்பவனாகிய பிரம்மனுக்கும், அடல் - பராக்கிரமம் பொருந்திய, ஆன் - இருஷபத்தையும், இபம் - யானையையும், ஊர்ந்தார்க்கு - வாகனமாக உடைய பரமசிவனுக்கும் இந்திரனுக்கும், எட்டா - எட்டாத, திரு - திருவமைந்த, பால் கடலான் - பாற்கடலில் இருப்பவனாகிய திருமாலினது, சிலம்பு - மலை ஆகும்.

விளக்கம்:—சிலம்பு-மலை. யாருடைய சிலம்பு? கடலான் சிலம்பு. எந்தக் கடலான் சிலம்பு? திருப்பாற்கடலான் சிலம்பு. இத்திருப் பாற்கடலான் எத்தகையவன்? எட்டாத்திருப்பாற்கடலான்? யாருக்கு எட்டாதவன்? போதில் இருப்பாற்கு - தாமரைப் பூவில் வீற்றிருக்கும் பிரம்மதேவனுக்கு. இன்னும் யாருக்கு எட்டாதவன்? அடல் ஆன் ஊர்ந்தாற்கு - வலிமை பொருந்திய இருஷபவாகனனை சிவனுக்கு. இன்னும் யாருக்கு? அடல் இபம் ஊர்ந்தாற்கு - வலிமைதங்கிய ஐராவதமெனும் யானைவாகனனை இந்திரனுக்கு,

பிரம்மனுக்கும் சிவனுக்கும் இந்திரனுக்கும் எட்டாத அந்தப் பாற்கடலில் பள்ளிகொள்ளும் திருமாலினது மலை எது? வேங்கடமே - திருவேங்கடந்தான்.

அவ்வேங்கடம் எதை நிகர்க்கும்? கொங்கைநிகர் வேங்கடம் - முலையை நிகர்க்கும் வேங்கடம். யாருடைய கொங்கையை நிகர்க்கும்? மேதினியாள் கொங்கை - பூமி தேவினுடைய கொங்கையை.

திருவேங்கடம் ஒரு முலையாயின், பூமிதேவிக்கு வேறு எதனை மற்ற முலையாகச் சொல்லலாம்? சோலைமலை - பாண்டிய நாட்டிலிருக்கின்ற திருமாலிருஞ்சோலை என்னும் மலையை. ஆதலால் இவ் வேங்கடம் அச்சோலை மலையோடுஎவ்வாறு இருக்கின்றது? இரண்டாய் - இரண்டாகி. அச்சோலைமலை எத்தகையது? சோதி மதி வந்துதவழ் சோலைமலை-பிரகாசம் பொருந்திய சந்திரன் தவழ்கின்ற திருமாலிருஞ்சோலைமலை.

விரிவுரை:—இத்திருவேங்கட மாலையிலுள்ள செய்யுள்கள் எல்லாம் பெரும்பான்மை ஒரேவிதமான அமைப்பை உடையன. அவை, முன்னிரண்டு அடிகளில் வேங்கடமலையின் சிறப்பைச் சொல்லி, அப்படிப்பட்ட வேங்கடம் திருமாலுக்கு இருப்பிடமாவது என்று கடைசி வார்த்தையைக் கொண்டு முடிகின்றன. அத்திருமாலின் சிறப்பைப் பின்னிரண்டு அடிகள் கூறுகின்றன. வேங்கடமே, என்ற சொல்லிலுள்ள ஏகார இடைச்சொல் வினைப்பொருளிலேனும் விளித்தல் பொருளிலேனும் வந்தது அன்று. ஒரு பொருளும் இல்லாமல் செய்யுளை அசைக்கவருகின்ற ஈற்றசையாகக் கொள்ளலாம். அல்லது, 'இதுவே என்வீடு' என்பதுபோல் பிரிநிலையாகக் கொள்ளலாம். அப்பொழுது, மற்ற க்ஷேத்திரங்களிலிருந்து வேங்கடத்தைப் பிரித்து இவ்வேங்கடத்தில்தான் திருமால் இருப்பதென அதனை விசேஷப்படுத்திக் கூறியதாம்.

இன்னும் முதலிரண்டு அடிகளில் பெரும்பான்மை உவமை, உயர்வுநவிற்சி, சிலேடை, மயக்கம் முதலிய பொருளணிகளும், பின்னிரண்டு அடிகளில் திரிபு மடக்கு முதலிய சொல்லணிகளும் அமைந்திருக்கக் காணலாம். பொருளணிகளைப்பற்றி இப்பாடங்களில் விளக்கியுள்ளோம். செய்யுளை அழகுறச் செய்பவைகள் அணிகள். கருத்தின்நயத்தினால் அவ்வழகைத்தருவன பொருளணிகள். பொருளழகு ஒருபுறம்இருக்கச் சொற்களை அமைக்குந் திறத்தினால்மட்டுமே அழகு உண்டாகுமானால் அத்தகைய அமைப்பைச் சொல்லணி என்பர். சொல்லணிகளில் முக்கியமானவை திரிபு, மடக்கு என்னும் இரண்டு. செய்யுள் அடிகளில், ஒரு அடியில் வந்த எழுத்துக்களில் முதலெழுத்துத் தவிர மற்ற எழுத்துக்கள் பல அடுத்த அடியிலும் தொடர்ந்துவந்து நிற்கப் பொருள் வேறுபடுமாயின் அவ்வணிக்குத் திரிபு என்று பெயர். எழுத்துக்கள்தாம் ஒன்றாயிருக்கும்; ஆனால் அவை பிரியும் போது வேறுவேறு பதங்களாகிப் பொருள் மாறலாம், அல்லது பதங்களும் உருவத்தில் அப்படியே இருக்கப் பொருள் மாத்திரம் மாறலாம். இந்தச் செய்யுளில், மூன்றும் அடியில் 'லிருப்பாற்கடலா' என்பதும் நான்காம் அடியில் 'திருப்பாற்கடலா' என்பதுமாகச் சேர்ந்து திரிபு அணி ஆகும் இவைகளில், லி, தி என்ற முதல் இரண்டெழுத்துக்கள் தவிர மற்ற ஏழு எழுத்துக்களும் ஒன்றியிருக்கின்றன. ஆயினும் பிரிக்கும்போது, முதலது, 'இருப்பாற்கு அடல் ஆன்' எனவும், பின்னது 'திரு பால் கடலான்' எனவும் வேறுவேறாகப் பிரிந்து பொருளும் வேறுபடலாகும். இப்படியே, முன் செய்யுளில், 'பரமபத நாட்டினன்,' என்றும் 'சிரமபதநாட்டினன்' என்றும் வருவதால் அதனில் திரிபு அணி அமைந்திருக்கின்றது. முதலெழுத்து வேறாக இருப்பதால் முதல் சொற்களும், பரம என்றும் சிரம என்றும் வேறுவேறாயின. ஆனால் முதலெழுத்துக்கள் தவிர மற்ற எழுத்துக்கள் இவ்விரண்டு தொடர்களில் ஒன்றாயிருப்பது மாத்திரமல்லாமல் பதம், நாட்டினன், என்ற மொழிகளும் ஒன்றே. ஆயினும் அவை அர்த்தத்தில் வேறுபடுகின்றன. இப்படி அர்த்தம் வேறுபட, முதலெழுத்துத் தவிர மற்ற எழுத்துக்கள் பல செய்யுள் அடிகளில் திரும்பிவருமானால் அது திரிபு.

K.C.R.700

குலசேகரர்.

[493-வது பக்கத் தொடர்ச்சி]

நடமாடுங் கோயில்

3. ஏற டர்த்ததும் ஏன மாய்நிலம்
கீண்ட தும்முன் இராமனாய்
மாற டர்த்ததும் மண்ண ளந்ததும்
சொல்லிப் பாடிவண் பொன்னிப்பேர்
ஆறு போல்வரும் கண்ண நீர்கொண்டு
அரங்கன் கோயில் திருமுற்றம்
சேறு செய்தொண்டர் சேவ டிச்செழுஞ்
சேறென் சென்னிக் கணிவனே

[ஏறு - காளைமாடு; அடர்த்ததும் - வலியழித்ததும்; ஏனம் - பன்றி; மாறு - பகைவர்; பொன்னி - காவேரி; சென்னி - தலை]

மறப்பொருளையும் அறப்பொருளையும் மேலே பாடிய அடியார், அவனுடைய அன்பன்றி வேறொன்றும் அறியார் ஆதலின் ஒவ்வொன்றையும் தனித்தனிச் செய்யுளில் வைத்துப் பாடி அவற்றை முன்பாட்டிற் போலக் கலந்து துய்க்காது தனித்தனிச் சுவையாகத் துய்ப்பர்.

ஏறடர்த்ததும்:—

நப்பின்னையின் தந்தையானவன் தனது பெண்ணை, ஆனேறு ஏழினையும் அடக்கியவனுக்கே, தருவதாக உறுதி கூறினமையால், முதலேதொடங்கித் தன்னோடு வாழ்ந்துவந்த நப்பின்னையை மணப்பதற்கு வேண்டி அவ்வேழு ஆனேற்றையும் வென்றடக்கி அழித்தருளினான். நாமும் முதலேதொடங்கி இவனுடன் தொடர்புடையோம். நமக்கும் இவனுக்கும் இடைச்சுவராய் நின்ற எழுவகைப் பிறவியினையும் இல்லாது செய்வான் இவனே.

ஏனமாய் நிலம் கீண்டதும்:—

இவ்வுலகமாம் தன் பொறையெனும் மனையாளைப் பாயெனச்சுருட்டிக்கொண்டு ஓர்கொடியவன் (இரணியாக்ஷன்) கீழுலகம் புகுந்தபோது இறைவன், பன்றியாய் வந்து நிலத்தை அகழ்ந்துசென்று கீழுலகில் மறைந்திருந்தவப் பொன்கண்ணனைக் கொன்று தன் கொம்பினால் உலகத்தைக் குத்தி எடுத்துவந்தனன். நாமும் கீழ்நிலையிலிருந்தால் கைகொடுத்துத் தூக்கிவிடுவான் இவனே.

முன் இராமனாய் மாறடர்த்ததும்:—

சீதையைக் கவர்ந்துசென்ற அக் கொடியோனை அழித்து நம் தாயை மீட்டுவந்தவன் இவனே! அவ்வண்ணமே நம் பகையாகிய அவா வெகுளி அறியாமை என்றவைகளை அழித்து நமது அறிவினைப் பழையபடி கொண்டுவாரானோ

மண்ணளந்ததும்.—

வானவர் மகிழவும் மண்சுமை தீரவும் மாவலிபால் மூன்றடிமண் இரந்துபெற்று மூவுலகையும் மாவலியையும் அளந்தான். நம் மனதையும் மூன்று நிலையையும் அளந்து, நான் எனும் செருக்காகிய மாவலியைக் கீழழுந்தச்செய்து நமது வினைச்சுமையைப் போக்குபவனும் அவனே.

சொல்லிப்பாடி.—

இவற்றையெல்லா மவன்செய்தது யார்பொருட்டு? அருட்டாயின் பொருட்டன்றோ? நப்பின்னையும் சீதாபிராட்டியும் மண்ணுலகும், அவனை மணந்த அருட் பெருந் தாயர் ஆவர். எனவே, அவனது திருவிளையாடலனைத்தும் அருளே யடியாக எழுந்தவைகள். அவ்வருள் உள்ளவரை நாம் அஞ்சுவானேன். அருள் செய்ய வருவானேல் எவ்வுருவும் எவ்வடிவும் ஏற்றதாகக் கொள்வான். எவ்வடிவும் தன் வடிவமாதலின், எதனையுந் தான் தனக்கேற்ற வடிவமென்றுகொண்டு அடியாருக்கு அருள்புரிய வருவான். இடையனாய் வருவான்; அரசனாய் வருவான்; குறளனாய்க் குறுகுவான், நெடியனாய் நீளுவான்; பன்றியாயும் போந்து அதன் தொழிலாகிய நிலங் கிளைத்தலையும் செய்வான். நாயென வந்தால் குரைக்க வேண்டாமா? பன்றியென வந்தால் நிலங் கீண்டல் வேண்டாமா? இடையனாக வந்தால் ஏறடர்க்க வேண்டாமா? மன்னனாக வந்தால் மாறடர்க்க வேண்டாமா? இயற்கையோடு மாறுகொள்ளாத இத்திருக் கூத்தினைக் கண்டால் வரும் மெய்ப்பாடுகளை எப்புலவர் விரித்துரைப்பர். அன்பர்கள் இக்கதைகளைப் புனைந்துரைத்துப்பாடாநிற்கின்றனர். கதையும் கருத்தும் ஒன்றுபட்டே கதையாகவே விளங்குகின்றனர்.

வண்பொன்னிப் பேராறுபோல் வருகண்ணநீர் கொண்டு அரங்கன் திருமுற்றத்துச் சேறுசெய் தொண்டர்:—

அன்பினை எண்ணுந்தோறும் உவகைச் சுவையும் மெய்ப்பாடும் தோன்றுகின்றன. இன்பக் கண்ணீர் பெருக்கி நிற்கின்றார்கள். வற்றாது நின்று வெள்ளமாய்ப்பெருகி உலகினையூட்டும் வன்மைபெற்ற பொன்னி எனும் பேராறுபோலக் கண்ணீர் உகுத்து நிற்கின்றனர். உள்ளத்தெழுந்த உவகைவெள்ளம் கண்வழியாக அலைபுரண்டு வருகின்றதுபோலும். ஆற்றிடைக்குறையாய் அழகொடு அமைதியுடைய தாய்ப் பேராற்றின் பெருமையோடு பொலிதலால் அரங்கம் இன்ப ஊற்றாயிற்று. திருவரங்கக் கோயில் புனிதமான இடமானதால் அத்திருமுற்றத்தில்தான் அடியவர்கள் கூடி நிற்கின்றனர். புறத்தே பொன்னியாறுபோல அடியார் அகத்தே ஓடும் இன்பப்போற்றைக் கண்வழியே திருப்பிவிட்டமையால் திருத்தொண்டர்கள் தம் கண்ண நீரால் திருமுற்றத்தைச் சேறு செய்து நிற்கின்றனர்.

சேவடிச் செழுஞ்சேறு என் சென்னிக் கணிவனே.—

அவர்களது செவ்விய திருவடி புதைந்த சேறு இன்ப வெள்ளத்தோடு இணைந்ததன்றோ? சேறெனை இகழவும் படுமோ? தொண்டரடிப்பொடி அஃதேயன்றோ. "கோயில் மண்ணைத் தெள்ளித் தருகிறேன்" எனச் சிறுமிகள் அந்நுண்ணிய வெண் மணலினைப் புகழ்ந்து மழை வேண்டிப் பாடுவர். இச்சேறு, அடியாராகிய நடமாடுங்கோயில் நின்றருளிய மண்ணன்றோ? அது திருவரங்கத்துத் திருமுற்றத்திருத்தலின் படமாடுங் கோயில் மண்ணுமாயிற்று. இருவகை எற்றம் பெற்ற ஈது திருமண்ணேயாகும். அதனிடையே இன்பத்தினைக் கண்ணாரக் கோரக் காணலாம். அதனினும் அழகிய பொருள் வேறொன்றுண்டோ; பல்வளம் நிரம்பிய பொருளும் உண்டோ. ஈதே செழுஞ் சாந்து. மற்றைய சாந்து புறத்தில் விளங்குவன. இஃது உள்ளத்தே ஊறி அறிவும் உயிரும் மணக்க வீசி அணிந்தார்க்கு இன்ப மூட்டும். இஃது அடியேனுக்குக் கிட்டுவ தொன்றோ? இதனையன்றோ யான் எனது புன்சென்னி பெருமைபெற அணிதல் வேண்டும்.

4. தோய்த்த தண்தயிர் வெண்ணெய் பாலுடன்
உண்டலும் உடன்றாய்ச் சிகண்டு
ஆர்த்த தோளுடை எம்பி ரான்என்
அரங்க னுக்கடி யார்களாய்
நாத்த ழும்பெழ நார ணாவென்று
அழைத்துமெய் தழும்பத் தொழுது
ஏத்தி இன்புறும் தொண்டர் சேவடி
ஏத்தி வாழ்த்துமென் நெஞ்சமே

[உடன் உண்டல் - ஒரேகாலத்து உண்ணுதல்; உடன்று - கோபித்து; ஆய்ச்சி - யசோதை; ஆர்த்து - பிடித்துக்கட்டிய; பிரான் - தலைவன்; நாத்தழும்பெழ - நாக்குத் தடித்துப்போக; மெய்தழும்ப - உடம்பு விழுந்துவிழுந்து வணங்குவதால் காய்ப்பேற; ஏத்தி - போற்றி].

அடியார்கள் அவனது அறப்பொருளைத் தனிச் சுவையாகத் துய்க்கின்றனர். மறப்பொருளை எண்ணிய போதினும் அறப்பொருளை எண்ணியபோது இவர்கள்நிலை மிக இன்பமாயது; ஒப்புயர்வற்ற தாயது; அது நிலைக்கப் பல்லாண்டுகூறும் நிலையில் வந்துவிட்டேன் யானும். மறப்பொருளைப்பாடும் நிலையில் பகையாகிய கொடியாது வருத்தத்தையும் பாட வேண்டுதலின் அன்பே வடிவான அடியார் மனம் அதனையும் பொறுத்ததில்லை போலும்; "பகை எழுந்ததே; இறைவனொடு பொருவார்களே! என்னுமோ" என அச்சம் இல்லாவிடத்தும், அன்பின் மிகுதியால் அஞ்சி நின்றமையால் அந்நிலையில் அவர்கள் அச்சத்தில் ஆழ்ந்தமை வாழ்த்தினை வேண்டி நிற்கவில்லை. ஆனால் அறப்பொருளில் அவன் அன்பன்றி வேறொன்றும் இல்லையன்றோ? இதைக்கண்ட அடியாரின் நிலையினை எவ்வாறு எடுத்துரைப்பது. இறைவனது எளிவந்த நிலையை என் என்போம். எமக்கெல்லாம் இறைவனை ஆண்டவன் ஆய்ச்சியால் கட்டுண்டான்! என்னே! என்னே!—கட்டி கட்டியாகத் தோய்ந்த தயிர் தடா நிரம்பக் கிடக்கின்றது. வெண்ணெயும் உறிநிறைய உள்ளது. பாலும் மிடாமிடாவாக இருக்கின்றது. (தோய்ந்த தயிர் தண்ணென்றிருத்தலை இயற்கையோடு மாறுபடாமல் புனைந்துரைத்த ஆழ்வார், தயிரினால் வரும் இன்பமனைத்தும் துய்த்தவர் போலும்). ஒருவரும் இல்லாத அற்றம் பார்க்கின்றான் கண்ணன். அசோதை, பால் தாராளா? தயிர் தாராளா? வெண்ணெய்தாராளா? இவற்றிற்கு இவன் அலைந்துநிற்க ஏழைக் குடும்பத்திலோ பிறந்தான்? அவள் தந்தவற்றை எல்லாம் உண்டபின்னும் கள்ளத்திலேயே கண்ணன்தன் கருத்தோடுகின்றது. அஃது மோர் திருவிளையாடலே. கள்ளவிழியை அப்புறமும் இப்புறமும் குறுவிழியாக விழித்துப்போய்த் தடாவிலும் மிடாவிலும் உறியிலும் அவாவினால் கீழ் ஆழக் கையைவிட்டு எவரும் வருவதன்முன்னம் அனைத்தையும் உண்ணவேண்டும் என்ற பரப்பரப்பால் பால் தயிர் வெண்ணெய் என்றவற்றை ஒருங்கே உடன் உண்கின்றான். முச்சுவையும் ஒரு சுவையாக அவற்றை ஒருசேர வாயில் துறக்கின்றான். தோய்ந்த தயிரில் கையிட்டபோது அது தண்ணென்றிருந்ததால் அவ்வூற்றின்பத்திற்கு மயங்கிச் சிறிதுபோது கையை எடாது தாழ்த்தினன்போலும். இதற்குள் வந்து விடுகின்றாள் அசோதை. அவனிடத்தே அவளுக்கு எவ்வளவு அன்புண்டோ அவ்வளவு சினமும் கொள்கின்றாள். வாயது கையதுவாகக் கொண்டி (களவு) யோடே கண்டு பிடிக்கின்றாள். கையையும் காலையும் உடலோடு சேர்த்துப் பிணைத்துக் கட்டிவிடுகின்றாள். அந்தத் தழும்பினை அவனது தோளில் இன்னும் காணலாம். அவளுக்கு நடுநடுங்கி நிற்பவன் போல அழுகையும் தொழுகையுமாய்ச் சிறுவாய் நெளித்து அஞ்சி நோக்குவதுமாய்க் கூத்தாடுகின்றான். கட்டுண்ணவன்றோ களவாடினன். இடைக்குடி, அதிலும் பெண், இவளுக்கு எல்லாம்வல்ல இறைவன் எளியனாய் அஞ்சி நிற்பதென்றால் என் என்பது! எந்தத் தோளினைக் கட்டினாள் அவள்? தோடுலா மலர்மங்கை தோளினை தோய்ந்த தோளன்றோ இன்று கட்டுண்டது. "கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்டு எத்திறம் உரலினோடிணைந் திரங்கிய எளிவே!" இதை எண்ணுந்தோறும் அவன் எனக்கும் எளியனாவான் அன்றோ? எம்பிரான், எமக்கெல்லாம் உரியனாகிய தலைவன். என், அம்மட்டோ? ஏழையேனாகிய எனக்கே உரிய அரங்கன் என்று சொல்லும்படியாகவன்றோ அவன் எளிமை இருந்தது. அவனுக்கடியார் ஆனவர்கள் இந்த எளிவினை நோக்கி மகிழ்ச்சியால் நாக்குத் தடிப்பேற மழலைபேசும் குழந்தைகள் அன்பால் "அம்மே" என்று பேசுதல்போல நாரணா என்று அவன்பெயரை அடைவுகெடச் சொல்லி யழைக்கின்றனர். இத்தகைய உயரியவன் இவ்வாறு எளியவன் ஆனானே என வீழ்ந்து வீழ்ந்து வணங்குகின்றனர். மெய்ம்மறந்து நின்றார்களாதலால், பன்முறை வீழ்ந்து வணங்கியதை அறியாது இன்னும்வணங்காது நிற்கின்றோமே என வீழ்ந்துவீழ்ந்து வணங்குகின்றனர். அதனையும் அறியாமல் மறுபடியும்வணங்குகின்றனர். இவ்வாறு எளிமையில் ஈடுபட்டு வணங்கியதால் அவர்கள் உடம்பெல்லாம் காய் காய்த்துப் போகின்றன. அவனது அன்பின் எளிவினை எல்லா வகையாலும் ஏத்துகின்றனர். இவர்கள் தம் உள்ளத்திற் கண்டதை உரை வழியாக ஓதுகின்றதே நம்மை உவகைக் கடலில் அழுத்துமானால், இறைவனை உண்ட இவர்கள் உள்ளம் என்ன நிலையில் இருக்கும்? இறைவனை உள்ளத்தே கண்டபோது இவர்களே இன்பமாகின்றனர் இறைவனை இவர்களிடை நன்குகாணலாம். வெண்ணெயுண்ட விளையாட்டினும் இவர்களது இன்பக்கூத்து எனக்கு இனியதாயிற்று. இவர்கள் நாத்தழும்பேறத் தொழுது மெய்ம்மறந்து மெய்தழும்பத் தொழுது இன்பமுறுவதனைக் கண்டபோது இந்நிலஉலகில் அரியநிலை யாதலின், இவர்கள் இறைவனுக்குப் பல்லாண்டு கூறுவதுபோல இக்காட்சி என்றும் விளங்கவேண்டி வாழ்த்துக் கூறுவேன். அவர்கள் சேவடியைப் பலவகையாலும் போற்றுவேன் இறைவனினும் இவர்களே எனக்கினியார்.

வில்லி பாரத விளக்கம்

ஆதிபருவம்

[464 பக்கத் தொடர்ச்சி]

காண்டவதகனச் சருக்கம்.

பொழிலில் பூக்கொய்த வெழில்மாதர் ஆடிய பனிநீரும், கலவைச்சாந்தும் ஒன்றுசேர்ந்து சேறுபட்டுத் தடாகம்போல் தேக்கியதால் அச்சோலைகளெல்லாம் செங்கழுநீர்த் தடம்போன் றிருந்தன. நீர் நிறைந்த தடாகத்திலிறங்கித் தையலார் விளையாட, அத்தடாகங்களும், அளகபாரமாகிய கூந்தற்பனையையும், மரகதம் ஆகிய பாக்குக்காயையும், பவளமாகிய பாக்குப் பழத்தையும், உடையதால் சோலைகள்போல் விளங்கின.

நீர்தூவுந் துருத்திகொண்டு அருச்சுனன் அரிவையரிருவர்மீது நீர்பெய்யவும் அவ்விருவரும் அவனிடம் பரிவுடையவராய்ச் செய்த செய்கைகளை இரண்டு கவிகளால் வருணிக்கிறார் வில்லி,

மெய்கொண்ட மொழிவிசயன் மெய்யினெழி
லிமையாமன் மேன்மே னோக்கு
மைகொண்ட குழலொருத்தி மற்றவன்செங்
கையிற்சிவிறி மழைகண் டஞ்சிப்
பொய்கொண்டு வகுத்தனைய மருங்கசையத்
தனபாரம் புளக மேறக்
கைகொண்டு முகம்புதைத்துத் தன்விரற்சா
ளரங்களிலே கண்கள் வைத்தாள்.
நங்கையங்கோர் கொடியனையாள் வதனமதி
சலமதியாய் நடுங்கு மாறு
பங்குனன்றன் றிருச்செங்கைப் பங்கயத்தின்
சிவிறியினூற் பரிவு கூரக்
குங்குமங்கொள் புனல்விடவு மிமையாமற்
புனல்வழியே கூர்ந்த பார்வை
செங்கலங்கற் புதுப்புனலுக் கெதிரோடி
விளையாடுஞ் சேல்கள் போலும்

[உண்மை பேசும் விசயனுடைய உடம்பி னழகைக் கண்டு கண்ணிமையாமல் மேலும் மேலும் நோக்கிநின்ற கருங்கூந்தலாள்ஒருத்தி, அருச்சுனனுடைய கையினின்றும் போந்த துருத்தியின் நீரைக்கண்டு பயந்து, இடையுண்டென்பது பொய்யே எனத்தக்க தன் சிற்றிடை யசையவும், ஆகம் புளகிக்கவும் கையைக்கொண்டு முகத்தை மூடி விரலாகிய சன்னலில் கண்களை வைத்து நோக்கினாள்]

[வஞ்சிக்கொடி போன்ற சுந்தரி யொருத்திமேல் அருச்சுனன் தன் அழகிய தாமரைபோன்ற கையிலுள்ள கருவியால், அவள் சந்திர வதனம் சலத்தின்தோன்றும் நிலாவைப்போல் நடுங்கும்படி குங்குமச்சாந்து கொண்ட நீரை விடவும், அவனிடமுள்ள ஆசையால் அவன் கண்ணிமையாமல் அந்நீர் வழியே பார்த்த பார்வையால் அவளுடைய கண்கள், கலங்கிச் சிவந்த புதுவெள்ளத்திற் கெதிரோடி விளையாடுகின்ற சேல்கள் போன்றிருந்தன]

இருவரும் அருச்சுனனிடத்தில் பரிவு கூர்ந்தவர்கள். இருவரும் அன்பின் மேலிட்டால் அவனையே யுற்றுநோக்கிக்கொண் டிருந்தார்கள். இருவர்மேலும் நீர் விழவும் ஒருத்தி அஞ்சிக் கண்புதைத்தாள். மற்றவள் அஞ்சாமல் கண்ணிமையால் நீர்வழியே அவனை நோக்கினாள். முதலாமவள் கண்புதைத்தும் சற்றே ஒதுங்கித்தன்நாயகன் மெய்தொட்டுப்பயின்றதுபோல அவன் கையினீர் வீழ்ந்ததும் உடம்பு பூரித்தாள். அவ்வின்பத்தைநுகர்ந்து சற்று நேரம்சென்றபின்ஒருவாறு தேறிக் கைவிரலின் வழியாய் அருச்சுனனை உற்று நோக்கினாள். சரேலென துருத்திநீர் பாய்தலும் நாரியர் அஞ்சவது இயல்பு. மருங்கசைய என்பது, அவள் தளர்நடை யுடையவளாய்ச் சற்று ஒதுங்கி நின்றதைக் குறித்தது. புளகமேறல் காதலன் செய்கையாலாயிற்று. கைகொண்டு முகம்புதைத்தல் நாணத்தாலும் பயத்தாலும் சிறிதுநேரத்தில் அவை யிரண்டும் நீங்கி, அவனைக் காணும் அவாவே மேலிட விரல்களை நீக்கி அவைகளின் வழியாய் அவனை நோக்கி நின்றாள். இச்செய்யுள் இயற்கைக்கு ஒத்திருப்பதோடு பாவையின் நாணம் முதலியவற்றை நன்கு விளக்குகின்றது. இடையைப் பொய்கொண்டு வகுத்தனைய வென்றது ஒரு புதுமையே. பொய்யேயிடை யென்றும் பொய்யோவிடை யென்றும் கூறுவதுண்டு. பொய்யைக் கொண்டுஇடையைச் சமைத்தலானது காண்போர்க்கு இடைபோலத் தோன்றுமெனினும் அத்தனையும் பொய்யென்றது கருத்து.

இன்னொருத்திசற்றே விழைவு மிக்கவள் போலும். ஆசிரியர் அவள் பார்வைக்குச் சிறப்பாக ஒப்புமையைக்காட்டினார். குங்குமப்புனல் கலங்கிய புதுவெள்ள நீருக்கு உவமை. கண்கள் சேல்களுக்கு உவமை. இமையாது நோக்கலால் அக்கண்கள் புனலில் விளையாடும் சேல்களென்னப்பட்டன. இன்னும்,

நெறிதருபைங் குழலின்மிசை வீசியநீர்
பெருக்காற்றி னிறைநீர் வற்றி
யறல்படுநுண் கருமணலி னரித்தொழுகுஞ்
சின்னீரோ டமைந்த தம்மா.

[நெறித்த பசுமையான கூந்தலின்மேல் வீசப்பட்ட நீரானது, ஆற்றுப் பெருக்கற்று நீர்க்கசிவுள்ள நுண்ணிய கருமணலில் அரித்தோடும் சிறிய நீரொழுக்கை ஒத்திருந்தது.]

மற்றொருத்தியின் அளகபாரத்தின்மேல் வீசப்பட்ட நீர் அக்கூந்தலை ஊடுருவிப் படிப்படியாய் இறங்கிச் சிந்தியது, ஆற்றுநீர் வற்றிய காலத்தில் அதன் நடுவில் கருமணல் உள்ளிடத்தில் அரித்துச் செல்லும் நீரொழுக்குப்போன் றிருந்தது. இதுவும் இயற்கையை விவரித்தவாறு.

இனி, மங்கையர் அவ்வாறே அருச்சுனன்மேல் துருத்திகொண்டு நீருந்தினார்கள். சுவேதவாகனன் கடகத் தோளின்மேல் எறியப்பட்ட கருவியின்நீர் 'களிந்த கிரிமிசைக் கடவுட் காளிந்தி பரந்ததெனக் கவினுமாதோ'. களிந்தவெற்பில் தெய்வத்தன்மை பொருந்திய யமுனை பரந்ததுபோல் அழகுபெற்றது.

பிறையனைய திலகநுதல் பேதையிளம்
பிடியொருத்தி பிடித்த செங்கை
நறைகமழும் பொலஞ்சிவிறி நண்ணியசெஞ்
சிந்தூர நாரம் வீச

வறைகழல்வெஞ் சிலைத்தடக்கை யருச்சுனன்றன்
றிருமுகத்தி லான போது
நிறைமதிமேல் வாளிரவி கரங்கணிரைத்
தோடுவபோ னிறத்த மாதோ.

[மூன்றாம் பிறையைப்போல் அழகுபட வளைந்து திலக மணிந்துள்ள நெற்றியுடைய மடமைபூண்ட இளைய பெண் யானை போன்றா ளொருத்தி, தன் னழகிய கையிற் பிடித்த வாசனை கமழும் பொன்னாலான துருத்தியிற் பொருந்திய சிவந்த சிந்தூர நீரை, ஒலிக்கின்ற வீரக்கழலை யுடையவனும், கொடிய வில்லையுடைய விசாலமான கைகளையுடையவனுமான அருச்சுனனுடைய திருமுகத்தில்தெளித்தபோது பூரண சந்திரன்மேல் சூரியன் தன் ஒளிபொருந்திய கிரணங்களைப் பரப்பினதுபோல் தோன்றிற்று]

அருச்சுனனுடைய முகம் இயற்கையில் உருண்டைவடிவமா யிருந்ததால், உவாமதிக் கொப்பிட்டுக் கூறப்பட்டது. சந்திரனுக்கு இயற்கையில் பிரகாசமில்லையென்றும், அவன் சூரிய கிரணங்களாலுண்டாகும் ஒளியையே கவர்ந்துண்டு செயற்கைக் காந்தியால் பிரகாசிக்கின்றானென்றும் பூகோள சாஸ்திரத்தில் சொல்லப்படுகிறபடியால், கரிய முகத்தின்மேல் செங்கிரணங்கள் பாய்வதுபோ லிருந்ததென்று கூறப்பட்டது. இரவியின் கிரணங்கள் காலையிலும் மாலையிலும் செந்நிறமுடைவனவாயிருத்தலின் இவ்வுண்மை பொருத்தமுடைத்து.

பாண்டு குமாரனும் கிருஷ்ணனும் பல துறைகளிலாடித் தங்கள் பெண்டிர் புடைசூழ அச்சோலையில் அமைக்கப்பட்ட வான்மனையி லமர்ந்தார்கள். இப்பால் இளவேனிலகன்று நெடுவேனிற் புகுந்தது.

நெடுவேனிற் புகுதாமே யிளவேனி
லகன்றதற்பி னிகரில் கஞ்சப்
படுவேய்வெள் வளையமுந்தண் பட்டால
வட்டமுஞ்செம் படீரச் சேறு
முடுவேய்நித் திலத்தொடையு மூடுறுமண்
டபத்தடமு மொழுகி நீண்ட
வடுவேய்கண் மடந்தையர்க்கு மகிழ்நருக்கு
மமைந்தனவான் மனைக ளெல்லாம்

[இளவேனிற்காலங்கழிந்து முதுவேனிற்பருவம் புகவே, குளங்களிற் பொருந்திய தனக்கு ஒப்புமையில்லாத தாமரையின் வெள்ளிய உட்சுருளும், குளிர்ச்சிபொருந்திய பட்டினாலான விசிறியும், நல்ல சந்தனச்சேறும், நக்ஷத்திரங்களையொத்த முத்துமாலைகளும், நடுவிற் பொருந்திய விசாலமான மண்டபங்களும், நீண்டொழுகிய மாவடுவை யொத்த கண்ணையுடைய பெண்களுக்கும் மைந்தருக்கும், அந்தப் பெரிய மாளிகைகளி லெல்லாம் அமைந்தன.]

குளிர்ச்சிக்குரிய பொருள்களெல்லாம் ஒருங்குசேகரிக்கப்பட்டு அவை செல்வவந்தர் மனைகளில் அவர்களது வெப்பதை நீக்க உபயோகப்படுத்தப்பட்டன. மனையென்றது இவ்விடத்தில் முற்கூறிய சோலைகளிலமைக்கப்பட்ட மனையென்றுங் கொள்ளலாம். ஊடுறு மண்டபத் தடமும் என்பதற்கு இங்கு மண்டபங்களினிடையே செய்யப்பட்ட தடாகம் என்று பொருள் கூறவும் இடமுண்டு. ஒழுகி நீண்ட கண், காதளவோடிய கண்.

இதற் கடுத்தசெய்யுளில், குலவுங்கை நெகிழாமல் தங் கணவரொடு சேர்ந்தார் அடையும் மகிழ்ச்சி கூறப்பட்டது. தங்கணவரைப் பிரிந்தமாதர், பிரிவாற்றாது இரங்கி எப்பொருளையும் நிந்திக்கத் தொடங்கினார்கள்.

மாரவசந் தனையகன்று வாங்குறுவெங்
கோடையினுன் மறுகி யாற்றா
தாமரளி மதுமலரி லாரவடங்
களிற்பனிநீ ராரச் சேற்றி
லீரநெடுங் குழலிசையி லியங்கியசா
மரக்காற்றி லிளநி லாவிற்
பேரழலும் புகுந்ததெனப் பிணங்கினார்தங்
கேள்வர்ப்பி ரிந்த மாதர்.

18906

[மாரனுக்குரிய தென்றற்காற்றை நீங்கி, எங்கும் பரவியிருக்கின்ற வெம்மையான கோடையால் (நெடுவேனிலால்) அலமுற்றுத் தாங்காதவராய், பஞ்சணையிலுள்ள தேன்கொண்ட மலர்களிலும், நாகணவியும் முத்துவடங்களிலும், பனிநீருண்ட சந்தனக்குழம்பிலும், குளிர்ச்சி பொருந்தி மனதிற்கினிமையைத் தருகின்ற நீண்டகுழலோசையிலும், உலவுகின்ற சாமரைக்காற்றிலும், சந்திரோதயத்திலும், பெரிய தீயும் புகுந்ததென்று மனங் குழம்பினார் தங்கள் கணவரைப் பிரிந்த மாதர்கள்]

மாரனுக்கு உற்ற துணையாதலால் தென்றல் மாரவசந்தன் எனப்பட்டது. இச்செய்யுளில் கண்ட கருத்துக்கள் புதுமையானவை யல்லவேனும், அவையாவும் ஒருங்கே சேர்க்கப்பட்டு நயம்பட உரைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் கணவரைப் பிரிந்தமாதர் மதியைப்பழித்து அவனைப் பரிதியென்றறைதலும், பனிநீரும் சந்தனமும் தங்களியற்கைமாறி வெம்மையைத் தருகின்றனவென்றலும், விரகதாபத்தால் நிகழும் செயல்களெனக் கவிகள் கூறியிருப்பினும், கோடைவெயிலினால் அவை அவ்வெப்பத்தையே அடைந்துவிட்டனவென்று வில்லி கற்பித்துக் கூறுவது இவ்விடத்தில் ஏற்றமுடையதாயும் தற்குறிப்பைப் பெற்றதாயும் இருக்கின்றது.

கோடைவெயில் சுடச்சுடமெய் கொளுந்தியிறந்
தனபோலக் கொண்டல் கோடை
வாடைசிறு தென்றலெனு மாருதங்க
ளெம்மருங்கும் வழக்க மின்றி
யாடையில்வெண் சாமரத்தி லாலவட்டத்
தினிலுயிர்ப்பி லழகார் நெற்றி
ஓடைமுக மதகயத்தின் றழைசெவியிற்
பல்சிறகி லொளித்த மாதோ

[வேனிற்காலத்து வெயில் கடுவதனால் உடம்பு தீப்பட்டு இறந்தன போலாகி, கீழ்க்காற்று, மேற்காற்று, வடகாற்று, இளந்தென்றல் என்னும் காற்றுகள் எத்திக்கிலும் இயக்கமின்றி, மனிதர் உடுப்பிலும், வெண்சாமரையிலும், விசிறியிலும், மூச்சுக்காற்றிலும், முகத்தில் அழகான நெற்றிப்பட்டமுடைய மதம்பொருந்திய யானையின் விசாலமான காதுகளிலும், பல பறவைகளி னிறகுகளிலும் ஒளித்துக் கொண்டன]

கருமழைக்குலம் கிழித்தொளிரும் மின்னெனப் பல செய்யுட்களிடையே இச்செய்யுள் அணிபெற மிளிர்கின்றது. சமுத்திரக்கரை யோரத்தில் இல்லாத நாடுகளில், வேனிற் காலத்தில் இலையசையப் போதுமான காற்று மிருப்பதில்லை. காற்றை யுண்டாக்கப் பலர் பலவிதமான சூழ்ச்சிகளைச் செய்வார்களாதலால், அச்சமயம் உண்டாகும் ஊதை மேற்சொன்ன கருவிகளில் ஒளித்ததாய்ச் சொல்லப்பட்டது. காற்று

சூன்யமாய்ப் போய்விடுதலால் தீயால்வெந்து இறந்தன போல் மெலிந்து ஓய்ந்துவிட்டனவென்றார். ஆசிரியர் இவ்விதம் அணியைச் சாதுரியமாய் அமைத்துள்ளது பாராட்டத் தக்கது. வெப்பத்தால் வாயுவின் இடை குறைந்து அது மேனோக்கிச் செல்லுமாதலால் அது ஒளித்ததென்பதற் கேதுவாயது. மனிதர் தங்கள் ஆடைகொண்டும், சாமரம், விசிறி, இவைகளைக் கொண்டும் மூச்சுக் காற்றினாலும் தங்களுடம்பிலுண்டாகும் வியர்வையை மாற்றிக்கொள்வார்களாதலாலும், யானை யிடைவிடாது தன் அகன்ற செவியை அசைத்து ஈக்களை ஓட்டுதலாலும், பறவைகள் பறத்தலாலே காற்று உண்டாகுமாதலாலும், இவையொழிய வேறே காற்று எங்கும் காண்பதரிதென்றார். பல்லிற கென்பதற்கு மயிற்பீலியாலான விசிறி யென்பதற் கிடமுண்டேனும் பல பறவைகளி னிறகென்பதே சிறந்த பொருள் தருகின்றது

தாழிநறுங் குவளையந்தார்த் தருமன்மக
னருட்புனலுந் தரங்க வேலை
யூழிநெடும் பெரும்புனலு முடலினுறு
வெயர்ப்புனலு மூறி யூறிப்
பாழிதொறு மிறைக்கின்ற பைம்புனலு
மல்லதுவெம் பருவந் தன்னாற்
பூழிபடு கமர்வாய நானிலத்துப்
புகலுதற்கோர் புனலு முண்டோ.

[தாழ்மையில்லாத மணம்பொருந்திய செங்குவளையின் அழகிய மாலையையுடைய தருமபுத்திரனது அருள்வெள்ளமாகிய நீரும், பூமியைச் சுற்றி நீண்டிருக்கும் அலையையுடைய சமுத்திரத்தின் பெருநீரும், உடலிலுண்டாகும் வியர்வைநீரும், நின்றுநின்று ஊறும் சிறு குளங்களினின் றிறைக்கப்படுகிற நீரும் அல்லாமல், வெம்மையானகாலத்தினால் புழுதிபொருந்திய நால்வகையாகச் சொல்லப்படுகின்ற பூமியில் எடுத்துச்சொல்வதற்கு வேறே நீருமுண்டோ?]
கோடைகாலத்து நீர்போல இன்பமளித்தலால் அருள் புனலுக்கு ஒப்பிடப்பட்டு அருளாகிய புனல்என உருவகமாய்க் கூறப்பட்டது. முதலடி சூக்குமமான குணத்தைத் தூலமான பொருளொன்றுடன் ஒப்புமை. கூறலில் கம்பன் செய்யுளை நிகர்க்கும் ஊறியூறி இறைக்கப்படுகின்ற நீர் என்பதைக் கற்பாங்கான நாடுகளிலுள்ள கிணறு குளம் முதலியவற்றா லறியலாம். இது நாட்டின் இயற்கையைத் தெரிவிப்பதுடன் காலத்திற்கேற்ற வருணனையாகவு மிருக்கிறது. நானிலம், குறிஞ்சி முல்லை மருதம் நெய்தலென்பன. பாலை தனிநில மாகாததால் நானிலம் என்று கூறப்படுகிறது. இறைக்கின்ற பைம்புன லென்பதைச் செயப்பாட்டு வினைப்பொருளிற் கொள்ளவேண்டும். இன்ன தன்மைத்தாய காலத்தில் தமக்குச் சிற்றாடையைச் சேடியர் செய்ய, இருபுறமும் கவரிவீச, அருச்சுனனும் கிருஷ்ணனும் வெண்குடை நீழலில் ஆங்கோர் சார் அமர்ந்திருந்தார்கள்.

பழமுதிர்சோலை.

வாழி வானரம்.

“மாவலேம் யாம் மக்கள்” எனப் பெருமிதம்பேசு வீர்; குரங்கினின்று மாந்தர் உயர்கதி யெய்தினரென உயிர்நூல்வல்லுநர் உரைக்குங்கால் முன்னிருந்த நிலைநினைத்து வெள்குவீர்; மற்றக்குரங்குகள் தாம், ‘வாலுண்டு நாரல்லேம்’ என ஏமாந்திருப்பினுமியையுமே! நயனில பயனில பொய் குறளை யின்னாச்சொல் இடையீடின்றென நவின்று, காமமுங் கவறுங் கள்ளும் தமதுரிமையாய், கைதவமுங் களவும் உடைமையாய், தற்புகழ்ந்தும் இச்சகம் பாடியும், சொல்லாலும் நினைவாலும் கடவுளைப் புறக்கணிக்கும் இம்மனிசராய் மாறுவதற்கு அஞ்சுவனபோலும் சில விலங்குகள். அவைதம் சிந்தை தெரிந்தொருபுலவர் கச்சியப்பசிவாசாரியார் கந்தபுராணத்திற் பெய்துளவோர் நிகழ்ச்சியை நமரர்காள், கேண்மின்.

எம்மையாளுடையவண்ணல் சிவபிரான் நமதன்னையொடும் கயிலையம்பொழில் நண்ணியமர்ந்தநாளாங்கோர் கூவிளைக் கிளையிருந்த குரங்கு இலைபல வரம்பில பறித்தவரை நனி தூர்த்தலும், சுந்தரி சிறிது சினந்தனள்நோக்க வெருவியவ்வ் வானரம் விதிர்ப்புற விழிந்து ஐயனையு மாய்தனையு மார்வமொடு வணங்கா, ‘அடியனேன் பிழைபொறுத்திர்’ என இரத்தலோடும்,

பிழையிதென வச்சமொடு பேசலெமை மீண்டே
விழுமியதொர் கூவிளையின் மெல்லிலைக ளிட்டு
வழிபடல் புரிந்தனை மனுக்குல முதித்து
முழுதுலகை யாளுகென முன்னவன்மொழிந்தான்

[பிழை செய்தாயென நீ பயங்கொள்ளவேண்டா. இங்கு நீ சிறந்த வில்லுவச் செடியின் மெல்லிய இலைகளைத் தூவி எமக்கு வழிபாடு செய்தனை. இதற்குமாறாக மனுகுலத்தில் பிறந்து நீ முழுது உலகையும் ஆள்வாயாக]

எனக்கறைமிடற் றிறையவ னருளுங்கால், ஆப்பைதனை அசைத்ததனி லரியதோ ரிடுக்கண் இச்சேட்டையால் உற்றதென மாழ்குமப் பேதைக்குரங்கு, சிறுபிழையிதற்கோ இத்துணைப் பெரியதண்டமெனப் பின்னு மஞ்சி,

நுங்களை வைகலு நோக்கி யுவப்பாய்
இங்குறை கின்ற திகந்து நிலம்போய்
மங்குறு செல்வ வலைப்படு வேனேல்
எங்கள் பிரான்பினை யெங்ஙன முய்கேன்

[உங்களை நான் எந்நாளும் தரிசித்தவண்ணம் உவகையோடு இங்கு வாழ்வதை யிழந்து, உலகித்திலே மங்குகின்ற செல்வத்தின் வலையில் சிக்கிக்கொள்வேனாயின் பெருமானே, பின் யான் எவ்வாறு உய்வேன்]

என வழுங்குமெல்லையில் முழுமுதற் கடவுள், “நின் உள்ளந் தூயது, யாதும் வருந்தல்; நிலத்திடைச் சில நாள் அரசிருந்து பின்னிங்கு மீள்வாய்” என்று தேற்றினு மாற்றாது,

பொய்ம்மறை யான புலாலுடல் போற்றி
அம்மையில் வாழ்விடை யற்ற முறுதே
யிம்முக னேடுற வெற்கரு ளென்னு
மெய்ம்முசு வின்கலை வேண்டிய தன்றே

[“பொய்யாகிய என் புலால் உடலைப்போற்றி உலகப் பொருள் நசையினால் நான் நாசமுறுதபடி இந்தக் குரங்கு முகத்தினோடேனும் நானங்கு என் கடவநாள் கழிப்பதற் கருள்க” என மெய்யுணர்வுடைய அம்முசைக்கலை ஈசனை வேண்டியது]

மானுபட முகமுங் கொண்டு பின் அப்பரமன்முன் ஆளாவ தெங்ஙனமென வெள்கிய கள்வ, வாழி வரம் பெற்றாய்.

“சபரி”

ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச்சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

முருகன் ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கட ரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய “Murugan, The Tiller” என்னும் சிறந்த நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும் விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பின் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0–12–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Lok. Tilak's GITHARAHSAYA or THE PHILOSOPHY OF ACTION

By V. Mangalvedkar, Rs. 2.

NATIONAL BOOKS AT HALF PRICE PRICE AND LESS.

	Price Original Rs.	A.	Reduced Rs.	A.
Duties of man, Mazzini ...	0	12	0	6
My Jail Expeiences, by Mahatma Gandhi ...	0	12	0	6
Young India 1919-1922 ...	4	0	3	0
Significance of Indian ... Nationalism, by H. M. Howsin ...	2	8	1	0
India's Challenge to civilization, by H. M. Howsin.	2	0	1	0
Gandhi and Anarchy, by Sir Sir C. Sankaran Nair ...	1	8	0	12
Philosophy of Non-co-operation, by Bhagavan Das M A.	1	0	0	8
The Plunder of India's Wealth, G. V. K. Rao ...	1	0	0	8
Indian Industrialism, by G. V. Ganapathy Aiyar...	1	0	0	8
Meaniag of Non-co-operation, by C F. Andrews ...	0	12	0	4
Ethics of Destruction, by Mahatma Gandhi ...	0	12	0	4
Key to Yerrowada, by M. Mahomed Ali ...	0	8	0	4
Our Educational Problem. by Lala Har Dayal, M. A. ...	1	8	0	12
Soul of India, by B.C. Pal	1	8	0	12
Advance India and Issue in India by B. Hougton I.C.S.	0	8	0	4
C. D Report (Few copies only left, ...	1	0	0	4
Development of Democracy in India K Rajeswara Row.	2	0	1	0
Non-co operation in other, lands by Fenner Brockway	1	0	0	8
India and its Government, by Fenner Brockway ...	0	8	0	4
Dyarchy and after, by C. R. Readdy, M.A. ...	0	4	0	2
Charka, with an introduction. by Sir P. C. Roy ...	0	4	0	2
The Science of Sex by an M. D. ...	2	0	1	0
Faded Flower, by K. Rajagopal ...	1	0	0	8
Imperialism, by K. M. Panikar, M. A. ...	1	0	0	8
The New Russia, by Postgate ...	0	12	0	6
Premanand and Pushpavati, by Namonarayana ...	0	8	0	4
A passing Phase of politics, by N. C. Kelkar M.L. A. ...	1	4	0	10
Leprosy in India, by T. S. Krishnamurthy Iyer ...	0	8	0	4
India and the Empire, by E. Carpenter ...	0	4	0	2
The Resurrection of the Congress by D. N. Bannerjee ...	0	4	0	2
Christ of to-day, by Rev. Holmes ...	0	4	0	2

Note.—A further discount of 10 per cent will be given on orders of not less than 15 books of any kind at a time and this concession holds good till the end of December 1929.

B. G. Paul & Co.,
Publishers, Madras.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன அற்புத சஞ்சிகை வாசிப்பவர் மனத்தைக் கவரத்தக்கதாய் இதுவரையில் தமிழில் வெளிவந்ததில்லை. ஜாதிமத வித்தியாசங்களின்றி யாவரையும் களிக்கச்செய்யும் வியாசங்கள் கொண்டது. பிரதி மாதமும் 56 பக்கங்களுடன் வெளிவரும்.

வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

10-ம் பதிப்பு] [வந்து விட்டது

ஆங்கில ஆசான்

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்துவாங்குங்கள்.

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன் பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம், வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சீமைகலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302,
தங்கசாலைவீதி, மதராஸ்.

Our Publications.

Kamban's Kosala.

By T. N. Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் மூதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணா 4.

உலக அதிசயம். விலை அணா 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணா 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணா 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

The Educational Publishing Co.,
Nungambakam, Madras.

வர்த்தமானம்

ஒருகிராமம் அழிந்து போயது:—பஞ்சாபில் உள்ள கங்காரா ஜில்லாவைச்சேர்ந்த பானபாலா என்ற கிராமத்தில் பலமான தீ ஏற்பட அக்கிராமம் முழுதும் எரிந்துபோயிற்று என்றும், தீயின்வயப்படாது அக்கிராமத்தில் இரண்டு வீடுகள்தான் இருக்கின்றனவென்றும், பொருள்சேதமும், உயிர்ச்சேதமும் அதிகமென்றும் லாகூர் செய்தி கூறுகின்றது.

* * *

பத்திரிகாசிரியருக்குத் தண்டனை.— ஸைமன் கமிஷன் லாகூர் வந்தசமயம், க்ஷத்திரிய சமாச்சார் என்ற ஒரு ஹிந்தி வாரப்பத்திரிகை லஜபதிராய் போலீஸ் அதிகாரியால் தாக்கப்பட்டதைக் கடிந்து எழுதிய கட்டுரை ராஜத்துவேஷம் உண்டாக்கக் கூடியதென அரசாங்கத்தார் மதித்து, அதன் ஆசிரியரைக் கைது செய்தனர். கீழ்க்கோர்ட்டில் அவருக்கு 6 மாதம் கடுங்காவல் விதிக்கப்பட்டது. பின்னர் அப்பீல் செய்துகொண்டதில் தண்டனை 4 மாதமாக மாற்றப்பட்டது.

* * *

சம்மதவயதுக் கமிட்டி:—சிறுவயதில் பெண்களுக்கு நடக்கும் கலியாணத்தைத் தடுக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட சம்மதவயதுக் கமிட்டியார் தங்கள் சிபார்சுகளை இந்திய அரசாங்கத்தாரின் பார்வைக்கு அனுப்பிவிட்டனர். அக்கமிட்டியின் சிபார்சு வருமாறு.—15 வயது சம்மதவயதெனச் சட்டம் செய்யவேண்டும். 15 வயதிற்குட்பட்ட காலத்தில் கலியாணம் நடந்தால் ஒருவருஷதண்டனைக்குள்ளாக்கச்சட்டம்வேண்டும். 12 வயதிற்குட்பட்ட பெண்களை மணக்கச்செய்தல் கடுமையாய்த் தண்டிக்கப்படல் வேண்டும்.

* * *

சென்னை ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி:—ஜூலை மாதம் வேதாரண்யத்தில் கூடப்போகும் தமிழ் மாகாண மஹாநாட்டிற்குத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காகச் சென்னை ஜில்லாக் காங்கிரஸ்கமிட்டிக் கூட்டம் ஒன்று சென்றவார இறுதியில் ஸ்ரீ, ஓ. கந்தசாமி செட்டியார் தலைமையில் கூடிற்று அக்கூட்டத்தில் ஸ்ரீசக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் பேரும் ஸ்ரீ சத்தியமூர்த்தி ஐயர் பேரும் பிரரேபிக்கப்பட்டன அதிகமானவர்கள் ஆதரிக்கச் சத்தியமூர்த்திஐயரைத் தலைவராக எடுக்குமாறு மஹாநாட்டு வரவேற்புக் கமிட்டிக்குத் தெரிவிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

* * *

சத்தியாக்கிரஹ முயற்சி:—டில்லிக்கு அருகாமையிலுள்ள மூரதாபாத்தில் ஆர்யசமாஜிகள் சத்தியாக்கிரஹம் செய்யும் முயற்சியில் இருந்துவருகின்றனர் என்று டில்லிச் செய்திமூலம் தெரிகின்றது. டில்லி ஆர்யசமாஜக் கமிட்டித்தலைவர் சுவாமி ராமாநந்தர் மூரதாபாத்தில் நாகர்கீர்த்தன ஊர்வலம் நடத்த முடியாது அரசாங்கத்தார் செய்துள்ளமையால், ஊர்வல உரிமை பாதிக்கப்பட்டுள்ளதென்றும், இப்பொழுது நடந்துவரும் மத்திபஸ்தத்தால் பயன் ஒன்றும் ஏற்படாது போகுமானால் சத்தியாக்கிரஹம் செய்ய வேண்டுமென்றும், அதற்கான ஏற்பாட்டை ஆர்ய சமாஜ பாதுகாப்புக் கமிட்டியார் செய்யவேண்டுமென்றும் ஒரு சுற்றுக்கடிதம் விடுத்துள்ளார்.

* * *

லெட்சிமிபுரம்—மீனாக்ஷிசங்கம் :—இச்சங்கத்தின் நான்காவதாண்டு நான்காவது மாதக்கூட்டம் நாளது திங்கள் பத்தாம்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்குச் சொக்கலிங்க வித்தியாசாலை மாணவர் மாணவிகளால் கடவுள் வாழ்த்து, தேசிய வாழ்த்துப் பாடக் காரைக்குடி திருவாளர். அரு சோம. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. அஞ்ஞான்று கி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் "குமணன்" என்பது பற்றிச் சொற்பெருக்கிட்டபின் தலைவரவர்கள் முடிவுரையில் "குமணவள்ளல்", "கல்வியின் பெருமை" என்பதுபற்றி பேசினர். காரியதரிசியவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்றுக் கூட்டம் இனிது நிறைவெய்தியது என்று காரியதரிசி ந. சொ. அருணாசலம் செட்டியார் எழுதுகிறார்.

* * *

தொழிற்கட்சியும் இந்தியாவும்:— பிரீபிரஸின் லண்டன் நிருபர் தந்திமூலம் அறிவித்த செய்தி வருமாறு:-தொழிற்கட்சியார் அரசாங்கத்தில் அதிகாரம் பெற்றதிலிருந்து, தொழிற்கட்சியின் செல்வாக்குள்ள தலைவர்களைக்கண்டு, அவர்கள் இந்தியா விஷயமாய்க் கொண்டுள்ள அபிப்பிராயத்தை அறியமுயன்றேன். டாக்டர். டி. ஷீல்ஸ் என்பவர் கூறியதாவது:—தொழிற்கட்சிக்குத் தன் கடமையைச் செய்யும் வகையில் அதிக சிரமம் இருந்துவருகின்றது. இந்திய விஷயமாய்த் தொழிற்கட்சியார் ஒரு முடிவுசெய்ய இந்தியர் துணை மிகவும் அவசியம். இந்தியர் எங்களுக்கு உதவிபுரிவார்கள் என்று எண்ணுகின்றேன். நாங்கள் செய்வது அனைத்தையும் இந்தியர் ஏற்கமுடியாது போயினும், எங்கள் நிலைமை அறிந்து எங்களிடம் அனுதாபத்துடன் நடந்து கொள்ளவேண்டு மென்பதே எனது கோரிக்கை.

* * *

மதுவிலக்கு முயற்சி:— மதுவிலக்கு விஷயமாக வேண்டியதைச் செய்யச் சென்னை அரசாங்கத்தார் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்கள். அக்கமிட்டியில் சுகாதார மந்திரி, கலால் கமிஷனர், சுகாதார டயரக்டர் ரெவனியூ இலாக்கா அதிகாரி உள்பட 24 பேர் அங்கத்தினராய் இருப்பார்கள். இக்கமிட்டியார் 7 முதல் 9 பேர் வரையிலுள்ள ஜில்லாக் கமிட்டிகளை ஏற்படுத்துவார்கள். உத்தியோகப் பற்றில்லாதவர்களும் இதனில் அங்கத்தினராயிருப்பர். மதுவிலக்குப் பிரசாரத்திற்கென்று 1930ம்—வருஷத்துப் பணத்திட்டத்தில் 4 லக்ஷம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பொருள் மத்திய கமிட்டியாரால் மதுவிலக்கிற்கென்று செலவு செய்யப்படும். மதுவிலக்கு விஷயமாய் உழைக்கும் உத்தியோகஸ்தரல்லாதாருக்குப் பிரயாணச்செலவும், படிச்செலவும் தரப்படும்.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல் பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.

வி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam MADRAS.

1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A. B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஒதற்பிரவு வரை—K. இராமரத்னம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்விலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் நீஷேன் எபிகூரன் ஜீனோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7 இலகிய எற்ற ஆராய்ச்சி

E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாயினோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தரனார் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R முத்தையர்

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுனூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

நாலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம—தபால் செலவு உள்பட:—

பையின்டு செய்யாதது	உள்நாடு ரூ 8—0—0	வெளிநாடு	ரூ 9—8—0
ஆப்லெதர் இல்டுபயிண்டு	உள்நாடு ரூ 10—0—0	வெளிநாடு	ரூ 11—8—0
காலிகோ பயிண்டு	உள்நாடு ரூ 9—8—0	வெளிநாடு	ரூ 11—0—0

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)